# 2018–ம் ஆண்டு ஜீலை மாதம் 13–ஆம் தேதி (13.07.2018) வெள்ளிக் கிழமை மாலை 05.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்.

1. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3 ஈரோடு பதிவு மாவட்டம், சூரம்பட்டி சார்பதிவு மாவட்டம், ஈரோடு வட்டம், வில்லரசம்பட்டி கிராமம், பட்டா எண். 200, பழைய க.ச.187, புதிய ரீ.சர்வே எண். 17/2 நெ.பு.ஹெ.0.39.5.க்கு த.ரூ. 1.09 இதற்கு பு.ஏ. 0.97–1/2 இது தற்போதைய சர்வே அளவுப்படி உள்ள பு.ஏ. 0.91–1/2 ( தொண்ணூற்று ஒன்னறை செண்ட்) விஸ்தீரணம் உள்ள புஞ்சை பூமியில் 45லிங்ஸ் அகல தென்வடல் ரோட்டுக்கும் தெற்கு, நல்லசிவம் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பூமிக்கும் வடக்கு, குமரவேல் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பூமிக்கும் கிழக்கு, செந்தில்வேல் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பூமிக்கும் மேற்கு. இதன் மத்தியில் உள்ள மேற்படி பு.ஏ. 0.91–1/2 விஸ்தீரண பூமியில் மத்தியில் வடபுறம் 26–1/4 அடி அகலமும், தென்புறம் 25 அடி அகலமும், கொண்ட தென்வடல் நீளத்தில் ஒரு சாலை ஏற்படுத்தி மனைநிலங்களாகப் பிரிவினை செய்து “ VIP GARDEN” எனப் பெயர் வைத்து விற்பனை செய்து வருவதில், நாங்கள் நாளது தேதியில் இந்த ஆவணம் மூலம் ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக வழங்கும் சாலை மற்றும் பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட மனை எண். 1–ம் நெ. உள்ள இடம் ஆகியவைகளுக்குச் செக்குப்பந்தி :-

மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ள வடபுறம் 26’3‘‘ அடி, தென்புறம் 25 அடி அகலமுள்ள தென்வடல் நீள சாலைக்குச் செக்குப்பந்தி

இனம் –1

நிலையிலுள்ள 30 அடி அகல தென்வடல் நீள ரோட்டுக்கும் – தெற்கு, அடியிற்கண்ட இனம் 3–ல் கண்ட பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட மனை எண். 1ம் நெ. உள்ள இடம் மற்றும் வீட்டுமனை எண்கள்.2 முதல் 9 வரை உள்ள மனைநிலங்களுக்கும் – மேற்கு, அடியிற்கண்ட இனம் 2–ல் கண்ட சாலைக்கும் – வடக்கு, மனுதாரர் வசமுள்ள இடத்திற்கும், மற்றும் வீட்டுமனை எண்கள். 10 முதல் 19 வரை உள்ள மனைநிலங்களுக்கும் – கிழக்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 26’3‘‘ அடிகளும், தென்புறம் 25 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 289–3/4 அடிகளும், மேல்புறம் 291 –1/2 அடிகளும், இந்தவகை அளவுள்ள சர்வே அளவுப்படியுள்ள 7447–1/4 சதுரடிகள் கொண்ட வடபுறம் 26 – 1/4 அடி அகலமும், தென்புறம் 25 அடி அகலமும், கொண்ட தென்வடல் நீள சாலை பூராவும்,

இனம் –2

பின்னும், மேலே இனம் 1–ல் கண்ட சாலைக்கும் – தெற்கு, வீட்டுமனை எண். 9–க்கும் – மேற்கு, ரீ.ச.17/3 நெ. காலை பூமிக்கும் – வடக்கு, வீட்டுமனை எண். 19 –க்கும் –கிழக்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 25 அடிகளும், தென்புறம் 25 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 2 அடிகளும், மேல்புறம் 2 அடிகளும், இந்தவகை அளவுள்ள சர்வே அளவுப்படியுள்ள 50 சதுரடிகள் கொண்ட 25 அடி அகல தென்வடல் நீள சாலை பூராவும்,

இனம் –3

பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட மனை எண். 1ம் நெ. உள்ள இடத்திற்குச் செக்குப்பந்தி –
மேலே இனம் 1–ல் கண்ட தென்வடல் நீள ரோட்டுக்கும் – கிழக்கு, சுவாதி கார்டன் மனைபிரிவுக்கும் – தெற்கு, ரீ.ச.17/5 நெ. காலை பூமிக்கும் – மேற்கு, வீட்டுமனை எண். 2–க்கும் –வடக்கு, இதன்மத்தியில் கிழமேலாக வடபுறம் 29 அடிகளும், தென்புறம் 49’7‘‘ அடிகளும், தென்வடலாக கிழபுறம் 49’ 9‘‘ அடிகளும், மேல்புறம் 10 + 46 =56 அடிகளும், இந்தவகை அளவுள்ள சர்வே அளவுப்படியுள்ள 2146 சதுரடிகள் கொண்ட பூங்கா பூராவும்,

ஆக மூன்று இனங்களும் கூடும் 9643–1/4 சதுரடிகள் (895.88 சதுர மீட்டர்கள் ) கொண்ட வடபுறம் 26–1/4 அடி அகலமும், தென்புறம் 25 அடி அகலமும் கொண்ட தென்வடல் நீள சாலை மற்றும் பூங்கா பூராவும், இதற்கு மேற்படி தென்வடல் நீள ரோட்டை தொடர்ந்து ஏற்கனவே நிலையிலுள்ள 30 அடி அகல தென்வடல் நீள ரோட்டின் வழியாகவும் கிழமேல் நீள மெயின் ரோடு வரை நடந்து கொள்ளவும், வண்டி வாகனாதிகள் ஓட்டிக்கொள்ளவும் பொதுவில் உபயோகித்துக் கொள்ளும் பொதுப் பாத்தியமும் சகிதமும் சேர்ந்தது.

மேற்படி சொத்து முன்பு வில்லரசம்பட்டி பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்டிருந்து, தற்போது ஈரோடு மாநகராட்சி எல்லையில் வார்டு எண். 31 ஆகவுள்ளது.

மேற்கண்ட அனுகுசாலை, பூங்கா மற்றும் மூலை முடுக்கு ஆகிய இடங்கள் ஈரோடு மாநகராட்சிக்கு 20.06.2018 அன்று சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் தான சாசனம் பத்திர எண்.1 /1854/2018 பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டள்ளது. மேற்படி சாலையில் மழைநீர் வடிகால் அமைத்து தார்சாலை அமைக்கப்பட்டு ஒப்படைப்பு செய்துள்ளதை ஈரோடு மாநகராட்சி எடுத்துக் கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். இ2/ 1172 /2018

**75. அனுமதிக்கப்பட்டது.**

2. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3 ஈரோடு மாவட்டம் ஈரோடு கிராமம் ரீ.சர்வே.எண். 702/3 ல் உள்ள பு.ஏ. 0.50 செண்ட் இந்த வகை விஸ்திரன பூமிக்கு நெடுஞ்சாலைத்துறை சாலையை ஒட்டி கிழமேலாக அமைந்துள்ள 23 அடி அகல தென்வடல் ரோட்டிற்கு செக்குப்பந்தி

30 அடி அகல நிலையில் உள்ள கிழமேல் சாலைக்கும் தெற்கு, ரீ.ச. 702/3, நெ. காலை பூமியில் இன்னும் எங்களது வசம் மீதமுள்ள கிழபுறம் பாக பூமிக்கும் வடக்கு, சைட் நெ. 1,2,3,4,5–க்கும் மேற்கு, சைட் நெ. 6,7,8,9,10,11–க்கும் கிழக்கு, இதன் மத்தியில் கிழமேலாக வடபுறம் 23.0 அடிகளும், கிழமேலாக தென்புறம் 23.0 அடிகளும், தென்வடலாக கிழபுறம் 146.0 அடிகளும், தென்வடலாக மேல்புறம் 1531/4 அடிகளும் , இந்த வகை அளவுள்ள 3475 ¾ சதுரடிகள் கொண்ட 23 அடி அகல தென்வடல் ரோடு ஒன்றும், மேற்படி ரோட்டினைத் தொடர்ந்து கிழமேலாக செல்லும் நிலையில் உள்ள கிழமேல் நீள ரோட்டையும் மற்றும் சம்மந்தப்பட்ட சகல ரோடுகளையும் பொதுவில் உபயோகித்துக் கொள்ளும் பாத்தியம் சகிதமும் சேர்ந்து இதுவும், பின்னும்,

மேற்படி கிராமம், மேற்படி ரீ.சர்வே எண்ணில், மூலை முடுக்கு என 37 1/2 சதுரடிகள் கொண்ட மூலை முடுக்கு இடமும், இதுவும், பின்னும், மேற்படி கிராமம், மேற்படி ரீ.சர்வே எண்ணில், பூங்காவிற்கான 170 1/2 சதுரடிகள் கொண்ட இடமும், என சேர்ந்து கூடும் 3683 1/2 சதுரடிகள் பூராவும் சேர்ந்து இதற்கு கட்டுப்பட்டது. மேற்படி சொத்தின் புதிய ரீ.சர்வே எண். 702/3, இது தற்போதைய உட்பிரிவுப்படி புதிய ரீ.ச.702/3ஏ மற்றும் 702/3பி என உள்ளது.

மேற்கண்ட அனுகுசாலை, பூங்கா மற்றும் மூலை முடுக்கு ஆகிய இடங்கள் ஈரோடு மாநகராட்சிக்கு 19.06.2018 அன்று சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் தான சாசனம்

பத்திர எண். 3771 பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டள்ளது. மேற்படி சாலையில் மழைநீர் வடிகால் அமைத்து தார்சாலை அமைக்கப்பட்டு ஒப்படைப்பு செய்துள்ளதை ஈரோடு மாநகராட்சி எடுத்துக் கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். இ2/ 1171 /2018

**76. அனுமதிக்கப்பட்டது.**

3. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட சம்பத் நகர் சாலை வணிக வளாகக் கடை எண். 2–ஐ வெண்டிபாளையம் டான்வாப் பண்ணை மகளிர் சுய உதவிக் குழுவினர் ஏல வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டு கடும் போட்டியில் கடை எடுத்து 01.11.2012 முதல் தொடர்ந்து நடத்தி வந்ததாகவும், தற்போது வாடகை அதிகமாக உள்ள காரணத்தால் தொடர்ந்து கடையினை நடத்த இயலாததால் மேற்படி கடையினை 30.06.2018 உடன் இம்மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாக கடிதம் கொடுத்துள்ளார்கள்.

மேற்படி கடையின் உரிமத்தை ரத்து செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அவசர அவசியத்தை முன்னிட்டு உடன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி மேற்படி கடையினை உடன் ஒப்படைக்க வேண்டியுள்ளதால் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**77. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

4. இம்மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டப் பணி நடைபெற்ற போது ஏற்பட்ட விபத்து தொடர்பாக திருமதி பெரமாயி, க/பெ. லேட் குருசாமி, 126, வாய்க்கால்மேடு குப்பிச்சிபாளையம், கேசரிமங்களம் கிராமம், பவானி வட்டம் ஈரோடு மாவட்டம் என்பவரால் மாநகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட பணியாளர் இழப்பீடு வழக்கு ப.இ. வழக்கு எண் 99/2018. இவ்வழக்கினை மாநகராட்சி சார்பில் திரு. செங்கோட்டையன் வழக்குரைஞர் அவர்கள் ஏற்று நடத்தவும் அதற்காகும் வழக்காடு கட்டணச் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

அனுமதிக்கலாம்.

(இ4/1775/2018)

**78. அனுமதிக்கப்பட்டது.**

5. இம்மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி.சாலையில் தினசரி அங்காடியில் பழைய மார்க்கெட் வணிக வளாக தரைத்தளக் கடை எண்கள் 5, 7, 8, 15, 19, 21, 36, 43, 47, 61 மற்றும் 68 ஆகியவைகளை ஒப்படைக்கும் தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 20.06.2018 அன்று நடைபெற்றது. மேற்படி ஏல நாளன்று ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள ஒரு கடைக்கு இரண்டு நபர்கள் வீதம் வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்.

| வ. எண். | கடை எண் | கடையின் அளவு | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஏலதாரர் பெயர் திரு. / திருமதி. | ஒப்பந்தப்–புள்ளி கேள்வித் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் திரு. / திருமதி. | ஒப்பந்தப்–புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | 5 | 6’x6’ அடி | எ. கௌதம் | 1950– | **எஸ். ரத்னா** | **2500–** |
| 2. | 7 | 6’x6’ அடி | வெங்கடாசலம் | 1950– | **தனம்** | **2540–** |
| 3. | 8 | 6’x6’ அடி | பழனிசாமி | 1980– | **மோகனாம்பாள்** | **2500–** |
| 4. | 15 | 12’.4½”x6’ அடி | பாக்யலட்சுமி | 2500– | **சிவக்குமார்** | **3000–** |
| 5. | 19 | 6’x6’ அடி | **ஆர். சரவணன்** | **2500–** | ஜி. பார்த்திபன் | 1950– |
| 6. | 21 | 6’x6’ அடி | **மாதேஸ்வரி** | **2600–** | எஸ். பஞ்சவர்ணம் | 1950– |
| 7. | 36 | 6’x6’ அடி | **பாப்பாத்தி** | **2520–** | தேன்மொழி | 1960– |
| 8. | 43 | 6’x6’ அடி | ஜெகதீஷ் | 1950– | **மகேஸ்வரி** | **2540–** |
| 9. | 47 | 6’x6’ அடி | **பி. காஞ்சனா** | **2500–** | கே. ஆனந்தராஜ் | 1950– |
| 10. | 61 | 6’x6’ அடி | தமிழ்ச்செல்வி | 1960– | **ராஜேந்திரன்** | **2500–** |
| 11. | 68 | 6’x6’ அடி | மீனாட்சி | 1980– | **மயிலாத்தாள்** | **2520–** |

மேற்படி பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் 6’x6’ அடி அளவுள்ள கடைக்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வியாக ரூ.2400–க்கு மேல் மற்றும் 12’.4½”x6’ அடி அளவுள்ள கடைக்கு ரூ.2700–க்கு மேல் வரப்பெற்றுள்ளது.

மேற்கண்டுள்ள 6’x6’ அடி அளவுள்ள கடை எண்கள். 5, 7, 8, 19, 21, 36, 43, 47, 61, 68 ஆகியவற்றுக்கு ரூ.2400–க்கு மேல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை மற்றும் 12’.4½”x6’ அடி அளவுள்ள கடை எண். 15–க்கு ரூ.2700–க்கு மேல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகையை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி கடைகளுக்கு உச்ச ஏலக் கேள்வித் தொகை கோரியவர்களுக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 01.07.2018 முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

(அ1/11205/2009)

**79.** **அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

6. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட சம்பத் நகர் வணிக வளாக கடை எண். 2 கடைக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 12.07.2018 அன்று நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு:

| வ. எண். | ஏல இனம் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏலதாரர் பெயர் திரு./திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் திரு. /திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | சம்பத் நகர் வணிக வளாக கடை எண். 2 | **பீளமேடு டான்வாப் பண்ணை மகளிர் குழு** | **3750-** | மகா கணபதி மகளிர் சுய உதவிக் குழு | 1950- |

சம்பத் நகர் வணிக வளாக கடை எண். 2-க்கு பீளமேடு டான்வாப் பண்ணை மகளிர் குழுவினர் ரூ.3750-க்கு ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை கோரியுள்ளனர்.

மேற்படி சம்பத் நகர் வணிக வளாக கடை எண். 2-க்கு பீளமேடு டான்வாப் பண்ணை மகளிர் குழுவினர் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகையினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மேற்படி கடைக்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரியவருக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 01.07.2018 முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**80. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

7. 1. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ள செலுத்தப்பட்ட முன் வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்புத் தொகை, உறுதித் தன்மை தொகைகள் ரூ.18,340/-ஐ, மேற்கண்ட பணிகள் முடிவுற்று ஆறு மாதங்களுக்கு மேலானதாலும், தணிக்கைத் தடை ஆட்சேபணை ஏதுமில்லாததாலும், மேற்படி தொகையை திரும்ப வழங்கக் கோரி திருவாளர் செந்திலாண்டவர் & கோ., விண்ணப்பித்துள்ளார். விபரம் பின்வருமாறு:-

| வ.எண். | பதிவேடு தொகுப்பு | வருடம் | ப.எண். | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| குடிநீர் கணக்கு வைப்புத் தொகை | | | | |
| 1. | WS Vol | 2012-2013 | 82 | 8396.00 |
| 2. | WS Vol | 2012-2013 | 82 | 9944.00 |
| | | | | **18,340.00** |

2. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ள செலுத்தப்பட்ட முன் வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்புத் தொகை, உறுதித் தன்மை தொகைகள் ரூ.12,000/-ஐ, மேற்கண்ட பணிகள் முடிவுற்று ஆறு மாதங்களுக்கு மேலானதாலும், தணிக்கைத் தடை ஆட்சேபணை ஏதுமில்லாததாலும்,

மேற்படி தொகையை திரும்ப வழங்கக் கோரி திரு.சி. சின்னுசாமி விண்ணப்பித்துள்ளார். விபரம் பின்வருமாறு:-

| வ.எண். | பதிவேடு தொகுப்பு | வருடம் | ப.எண். | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| வருவாய் நிதி வைப்புத் தொகை | | | | |
| 1. | RF Vol-5 | 2012-2013 | 99 | 12000.00 |
| | | | | **12,000.00** |

மேற்கண்ட வைப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதால், குடிநீர் கணக்கு காலங்கடந்த வைப்புத் தொகை ரூ. 18,340/-யை திருவாளர் செந்திலாண்டவர் & கோ அவர்களுக்கும், வருவாய் நிதி வைப்புத் தொகை ரூ. 12,000/-ஐ திரு. சி. சின்னுசாமி அவர்களுக்கும் வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

காலங்கடந்த வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதால், குடிநீர் கணக்கு காலங்கடந்த வைப்புத் தொகை ரூ. 18,340/-யை திருவாளர் செந்திலாண்டவர் & கோ அவர்களுக்கும், வருவாய் நிதி வைப்புத் தொகை ரூ. 12,000/-ஐ திரு. சி. சின்னுசாமி அவர்களுக்கும் திருப்பி வழங்க அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். பி3/3421/2017

**81. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

8. ஈரோடு மாநகராட்சி (வார்டு எண்.60)-ல் ஈரோடு கிராமம் ரீ.ச.எண்கள்.1385/1 பார்ட், 1386/1 பார்ட் - இல் மனை எண்.A-க்கு 1033.27 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு , வரன்முறை வேண்டி மனுதாரர் உறுப்பினர் செயலர் ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமத்தில் விண்ணப்பிக்கப்பட்டதின் பேரில், அனுமதி எண்.ம.வ.(வரன்முறை) ஈஉதிகு எண்.23/2018 என எண்ணிட்டு கொள்கை அளவிலான (In Principle approval for the layout framework) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியற்ற மனைப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள 4 எண்ணம் 30” சாலைகள், 1 எண்ணம் 40”சாலை மற்றும் 5” அகலமுள்ள கழிவுநீர் வாய்க்காலுக்கான இடம் ஆகியவை ஈரோடு மாவட்ட பதிவாளர் அலுவலக தான சாசனம் பதிவு எண்.3831/2018 நாள்.22.06.2018 - ன் மூலம் முறைப்படி ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்படைக்கப்பட்ட சாலைகளை ஈரோடு மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம்

கோப்பு எண். 2991/18/இ1

**82. அனுமதிக்கப்பட்டது.**

9. ஈரோடு வெண்டிபாளையம் உரக்கிடங்கில் அமைந்துள்ள 10 TPD Bio-Methanation Plant-ஐ கூடுதல் வசதிகளுடன் Bottling Plant-ஆக மாற்றி அதை பொது மக்கள் பங்களிப்புடன் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தளிக்கவும் மற்றும் மேற்படி

பணிக்கான திட்ட செயலாக்க அலகாகவும்(PIU) Central Leather Research Institute, Adayar, Chennai நிறுவனத்தை நியமிக்கவும் மற்றும் அதற்கான ஆலோசக கட்டணமாக ரூ.3.00 இலட்சம் வழங்கலாம் என நகராட்சி நிர்வாக அணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.47666/2012/P3 நாள்.10.01.2018-ல் தெரிவிக்கப்பட்டதின்படி மன்றத் தீர்மானம் எண்.252 நாள்.28.03.2018-ல் அனுமதி வழங்கப்பட்டு, மேற்படி Central Leather Research Institute, Adayar, Chennai நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது.

அதனைத் தொடர்ந்து Chief Scientist & Chairman, Central Leather Research Institute, Adayar, Chennai அவர்களின் கடிதம் எண்.PPBD/2018-19/CNP நாள்.11.05.2018-ல் மேற்படி ஈரோடு வெண்டிபாளையம் உரக்கிடங்கில் அமைந்துள்ள 10 TPD Bio-Methanation Plant-ஐ கூடுதல் வசதிகளுடன் Bottling Plant-ஆக மாற்றி அதை பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தளிக்கவும் மற்றும் மேற்படி பணிக்கான திட்ட செயலாக்க அலகாகவும் செயல்படுத்துவதற்கான கட்டணம் ரூ.5,01,500/-(Installment charges of Rs.4,25,000/-+GST@18% of Rs.76,500/-) செலுத்திய பிறகே பணி மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியை மேற்கொள்ளும் பொருட்டு அதற்கான கட்டணம் ரூ.5,01,500/-ஐ Central Leather Research Institute, Adayar, Chennai நிறுவனத்திற்கு செலுத்தி மேற்படி பணியை மேற்கொள்ள தனிஅலுவலரின் திருத்திய அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-

அனுமதி வழங்கலாம்.

(இ1/234/2018)

**83. அனுமதிக்கப்பட்டது.**

10. ஈரோடு மாநகராட்சி (வார்டு எண்.46)-ல் ஈரோடு கிராமம், ரீ.ச.எண்.897/6B,7B, 898/7B–இல் 79544.11 ச.அடி பரப்பளவு இடத்தில் லட்சுமி கார்டன் என்ற பெயரில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, வரன்முறை வேண்டி மனுதாரரின் விண்ணப்ப எண் DTCP/L/0034087/2017-ன்படி உறுப்பினர் செயலர், ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமத்தில் விண்ணப்பிக்கப்பட்டதின் பேரில், அனுமதி எண்.ம.வ.(வரன்முறை) ஈஉதிகு எண். 24/2018 என எண்ணிட்டு கொள்கை அளவிலான (In Principle approval for the layout framework) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியற்ற மனைப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் , மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடம் ஆகியவைகளை ஈரோடு மாவட்ட பதிவாளர் அலுவலக தான சாசனம் பதிவு எண்.4361/2018 நாள்.13.07.2018 - ன் மூலம் முறைப்படி ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடங்களை ஈரோடு மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம் கோப்பு எண். 3722/18/இ1

**84. அனுமதிக்கப்பட்டது.**

**11.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட ஹெம்மிங்வே மார்க்கெட் கடை எண். 8–ன் உரிமதாரர் திரு. ஈ.எஸ். துரைராஜன் என்பவர் 29.03.2014–ல் காலமாகி விட்டார். மேற்படி கடைக்கு டிசம்பர்–2016 வரை வாடகை செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி கடைக்கு 30.04.2018 வரை வாடகைத் தொகை ரூ.87596– நிலுவையாக உள்ளது. மேற்படி கடையின் குத்தகைதாரர் காலமானதால் அவருடைய வாரிசுகள் கடையினை தொடர்ந்து நடத்த முன்வரவில்லை.

தற்போது ஹெம்மிங்வே மார்க்கெட் கடை எண். 8–ஐ பொது ஏலத்தின் மூலம் திரு. கே.ஆர். ஸ்ரீதரன் என்பவருக்கு 01.05.2018 முதல் ஒப்படைக்கப்பட்டு கேட்புக்கு கொண்டு வரப்பட்டது.

எனவே மேற்படி கடைக்கு 30.04.2018 வரை நிலுவையாக உள்ள தொகை ரூ.ரூ.87596– ஐ கேட்பு பதிவேட்டிலிருந்து தள்ளுபடி செய்ய ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**85. அனுமதிக்கப்பட்டது.**

**12.** ஈரோடு மாநகராட்சியில் தலைமை நீரேற்று நிலையம் மேல்நிலைத் தொட்டிகள், அலுவலக கட்டிட இரவு காவலர் பணி, வ.உ.சி.பூங்கா, வெண்டிபாளையம் உரக்கிடங்கு, பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் லிமிடெட் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் 25 டெக்ஸ்கோ பணியாளர்களின் ஒப்பந்தக்காலம் 31.07.2018ல் முடிவடைவதால் 01.08.2018 முதல் ஒப்பந்த காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீட்டித்து வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் பிரதிமாதம் ரூ.7,90,000/–ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேலும் அரசால் அவ்வப்போது உயர்வு செய்யப்படும் ஊதியம் மற்றும் அகவிலைப்படியை வழங்கும்போது ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதிக்கலாம்.

சி1/13888/2006

**86. அனுமதிக்கப்பட்டது.**

13. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவுற்று சேதமடைந்த 7.02 கி.மீட்டர் நீள சாலைகளை ரூ10.625 கோடி மதிப்பீட்டில் TURIP 2018-19 திட்டத்தின் கீழ் சீரமைக்கக் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் தலைமையில் நடைபெற்ற TURIP 2018-19-க்கான திட்ட அனுமதி வழங்கும் குழுவில் ஈரோடு மாநகராட்சி சாலைப் பணிகளை மேற்கொள்ள கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ரூ. கோடியில்)

| மாநகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக் குழு / மத்திய நிதிக் குழு மானிய நிதி | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஈரோடு | 10.62 | 0.60 | 7.80 | 0.60 | 1.00 |

மேலும் மேற்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டிற்கு மன்ற ஒப்புதல் பெற்று வழங்கத் தெரிவித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12981/2018/இ3 நாள்.27.06.2018-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவுற்று சேதமடைந்த சாலைகளில் 7.02 கி.மீட்டர் நீள சாலைகளை TURIP 2018-19-ன் கீழ் மேற்கண்டவாறு அரசு மான்யம் ரூ.9.00 கோடியும் மற்றும் மாநகராட்சி நிதி 1.62 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.10.62 கோடி மதிப்பீட்டில் மேற்படி பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

அனுமதி வழங்கலாம்.

(இ1/3267/2018)

**87. அனுமதிக்கப்பட்டது.**

14. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2 க்குட்பட்ட வார்டு எண் :18 பெரியசேமூர் கிராமம் ரீ.ச.எண்கள்: 416/2B,3,4B&4C -ல் 2.63 ஏக்கர் விஸ்தீரணத்தில் உத்தேச வீட்டுமனைப்பிரிவு அமைந்துள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவிற்கு உறுப்பினர் செயலர் (பொ) / உதவி இயக்குநர், ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்: 1162/2017 ஈ.உ.தி.கு-2 நாள்:17.02.2018 ல் தொழில் நட்ப ஒப்புதல் வழங்க மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பூங்கா இடத்தினை மாநகராட்சிக்கு ஒப்படைக்க கோரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இம்மனைப்பிரிவில் உள்ள சாலைகள், மூலை முடக்குகள் பூங்கா வகையறாக்கள் ஆகியவைகளை ஈரோடு சார்பதிவாளர் அலுவலக தானசாசன பத்திரம் பதிவு எண்: 1828/2018, நாள்: 18.06.2018 ன் மூலம் முறைப்படி ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் இம்மனைப்பிரிவில் தார்சாலை, வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மனைப்பிரிவில் குடிநீர் பிராதன குழாய்கள் அமைக்க தொகை ரூ. 97500/-ம் ரசீது எண்: 056/201/1/18-19/0003903 நாள்: 20.06.2018 ன் படி இம்மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. தெரு விளக்குகள் மற்றும் மின் கம்பங்கள் அமைக்க தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மான கழகம் லிமிட்ற்கு தொகை ரூ. 1,66,980/- 03.07.2018 ஆம் தேதியில் செலுத்தப்பட்டுள்ளது. (பூங்கா இடத்திற்கான செக்குபந்தி விபரம்: பூங்கா இடம்: 1 ரீ.ச.எண்: 418 பூமிக்கும் தெற்கு, 50அடி அகல முழுமைத்திட்ட தென்வடல் ரோட்டுக்கு கிழக்கு, ரீ.ச.எண்: 418 பூமிக்கும் மேற்கு, ரீ.ச.எண்: 416/3 பூமிக்கு வடக்கு, இதன் மத்தியில் வடபுறம் கிழமேலடி 77.25 ச.அ, தென்புறம் கிழலேடி 191.75, ச.அ மேல்புறம் தென் வடலடி 50 ச.அ, கிழபுறம் தென் வடலடி 152.25, ச.அ இந்த வகை அளவுள்ள 846.72 சதுர மீட்டர் கொண்ட 9114 சதுரடிகள் கொண்ட இடம் முழுவதும். பூங்கா இடம்: 2,4 வது அயிட்ட ரோட்டுக்கும் கிழக்கு, ரீ.ச.எண் 419 பூமிக்கும் மேற்கு ரீ.ச.எண்: 416/4C-ல் மனை இடங்களாக பிரிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு வடக்கு, ரீ.ச.எண்: 416/3 பூமிக்கும் தெற்கு, இதன் மத்தியில் வடபுறம் கிழமேலடி 67.20 ச.அடி, தென்புறம் கிழமேலடி 43.30 ச.அடி, கிழபுறம் தென்வடல் 39.30 ச.அடி, மேல்புறம் தென்வடலடி 84.00 ச.அடி இந்த வகை அளவுள்ள 271.40 சதுர மீட்டர் கொண்ட 2921 சதுரஅடிகள் கொண்ட பூங்கா இடம் முழுவதும்). எனவே மேற்படி ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் பூங்கா வகையறாக்களை இம்மாநகராட்சி வசம் எடுத்துகொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

அனுமதி வழங்கலாம்.

(இ1/1635/2017)

**88. அனுமதிக்கப்பட்டது.**

## 2018–ம் ஆண்டு ஜீலை மாதம் 30–ஆம் தேதி (30.07.2018) திங்கட் கிழமை காலை 11.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்.

**1.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4 வார்டு எண்.53 சர்வே வார்டு எண்.E பிளாக்-14 புல எண்.1.3 &-5-ல் அமைந்துள்ள துப்புரவு பணியாளர் குடியிருப்பு பகுதி 2.16 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம் மாநகராட்சிக்கு சொந்தமானதாகும். இந்த இடத்தில் 120 மாநகராட்சி துப்புரவு தொழிலாளர்கள் குடியிருப்புகளும், குடியிருப்புகளை சுற்றி தோராயமாக 350 ஆக்கிரமிப்புதாரர்களும் சுமார் 50 வருடங்களாக வசித்து வருகின்றனர். இந்த குடியிருப்புகளின் மேல் கூரையானது ஓட்டால் அமைந்துள்ளது.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களின் 23.06.2018-ம் தேதிய கடிதத்தில் துப்புரவு தொழிலாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டிக்கொடுக்க இக்குடியிருப்புப் பகுதியை, குடிசை மாற்று வாரியத்திற்கு ஒப்படைப்பு செய்யுமாறு தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார். மேலும் நிர்வாக பொறியாளர் குடிசை மாற்று வாரியம் அவர்களின் 20.07.2018-ம் தேதியிட்ட கடிதத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான துப்புரவு பணியாளர் குடியிருப்பு பகுதியில் அங்குள்ள துப்புரவுப்பணியாளர்களுக்கும், ஆக்கிரமிப்புதாரர்களுக்கும் பாரத பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட நில உரிமை மாற்றம் செய்து தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் இதற்கான அரசாணை எண்.M.S.No.25 / ந.நி (ம) கு.வ. துறை நாள்.25.02.2000-ன்படி மனை (1 கிரவுண்ட் =2400 சதுரடி) ஒன்றுக்கு ரூ.10,000/- வீதம் செலுத்த தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் இந்த திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு அந்த நிலத்தில் பூர்வாங்க சர்வே பணிகள் செய்யவும், மண் பரிசோதனை செய்யவும் இந்த நிலத்திற்கு முன் நுழைவு அனுமதியும் வழங்குமாறு வேண்டியுள்ளார்.

எனவே ஈரோடு மாநகராட்சி சர்வே வார்டு எண்.E பிளாக்-14 புல எண்.1.3 &-5-ல் 2.16 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தை அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்ட, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு முன் நுழைவு அனுமதி (Enter upon permission) வழங்க மாமன்ற ஒப்புதலுடன் அரசை கேட்டுக்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம்

கோப்பு எண். 3870/18/இ1

**89. அனுமதிக்கப்பட்டது.**

2. ஈரோடு மாநகராட்சி ஒருங்கிணைந்த திடக் கழிவு மேலாண்மை திட்டம் 2015-16-ன் கீழ் ஒரு எண்ணிக்கை Skid Steer Loader வாகனம் வாங்கும் பணியை ரூ.23.00 இலட்சம் உத்தேச மதிப்பில் மேற்கொள்ள மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத் தீர்மானம் எண்.220 நாள்.08.03.2018 அன்று அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து இரு உறை முறையில் 04.04.2018-அன்று மறுஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அதன் விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1. | M/s. Marwell Enncon Tech Pvt. Ltd, Coimbatore |
| 2. | M/s. Suryabala Earth Movers, Coimbatore |

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் (Technical Bid) 04.04.2018 தேதியன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மூலம்

கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் M/s. Suryabala Earth Movers, Coimbatore நிறுவனத்தினர் பெரும்பாலான ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்காமல் ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்ததால் தொழில்நுட்ப தகுதிபெறவில்லை. எஞ்சியுள்ள M/s. Marwell Enncon Tech Pvt. Ltd, Coimbatore நிறுவனம் தனது ஒப்பந்தப்புள்ளியுடன் டேவணித் தொகையை வங்கி வரைவோலையாகவும், தொழில்நுட்ப தகுதிக்கான ஆவணங்களையும் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்துள்ளனர்.

எனவே தொழில்நுட்ப தகுதி பெற்றிருந்த மேற்படி M/s. Marwell Enncon Tech Pvt. Ltd, Coimbatore நிறுவனத்தின் price bid 25.06.2018 அன்று திறக்கப்பட்டது. அவ்வாறு திறக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்குகையில் பெறப்பட்டவிபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| M/s. Marwell Enncon Tech Pvt. Ltd, Coimbatore | Rs. 19,18,865/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற M/s. Marwell Enncon Tech Pvt. Ltd, Coimbatore நிறுவனத்தாரால் வழங்கப்பட்ட விலைவிகிதம் GST வரியுடன் சேர்த்து ரூ.22,64,261/- மதிப்பீட்டு விலையை விடக் குறைவாக உள்ளதால் இந்நிறுவன ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு: -**

அனுமதி வழங்கலாம்.

(இ1/ 5431/2013)

**90. அனுமதிக்கப்பட்டது.**

**3.** திரு. எம். ராஜாமதிவாணன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்கள் தனது **06.07.018**–ம் தேதிய கடிதங்களில், **31.07.2018** உடன் மூன்று ஆண்டுகள் முடிவடைந்தமையால் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு மாநகராட்சி நிலை வழக்கறிஞராக நியமனம் செய்து தருமாறும், மாதாந்திர தொடர் கட்டணம் ரூ.**7000**– மற்றும் வழக்கு கட்டணம் ரூ.**7000**–மாக வழங்குமாறும் கோரியுள்ளார்.

ஈரோடு மாநகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்படும் வழக்குகளை **31.07.2012** முதல் ஏற்று நடத்தி வந்த திரு. எம். ராஜாமதிவாணன் அவர்களின் நியமனக் காலம் இம்மாமன்றத் தீர்மானம் எண். 173, நாள். 31.08.2012–ன்படி **31.07.2015** உடன் முடிவடைந்துவிட்டது. இம்மாமன்றத் தீர்மானம் எண். 510, நாள். 29.05.2013–ன்படி மாதாந்திர தொடர் கட்டணமாக ரூ.**3000**– வீதம் **31.07.2015** வரை வழங்கப்பட்டு வந்தது.

மேலும் மாநகராட்சி சார்பாக வேறு நிலை வழக்கறிஞர் யாரும் நியமிக்கப்படாத நிலையில் இம்மாநகராட்சியின் மீது தொடரப்படும் வழக்குகளை நாளதுவரை தொடர்ந்து கவனித்து வருகிறார். இம்மாமன்றத் தீர்மானம் எண். 528, நாள். 30.08.2016–ன்படி மாதாந்திர தொடர் கட்டணம் ரூ.**3000**–லிருந்து ரூ.**5000**–மாக உயர்வு செய்து **01.08.2015** முதல் தற்போது வரை வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மாதாந்திர தொடர்கட்டணம் ரூ.**5000**–லிருந்து ரூ.**7000**–ஆகவும் மற்றும் வழக்கு கட்டணம் ரூ.**6000**–லிருந்து ரூ.**7000**–ஆகவும் வழங்குமாறு கோரியுள்ளார்.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். **14984/2013**/எம்**2**, **06.05.2013**–ம் தேதிய கடிதத்தில் நகராட்சி சட்ட விதி தொகுப்பு **1**–ல் பத்தி **55.5, 55.6** மற்றும் **55.7**–ல் தெரிவித்துள்ளவாறு மாதாந்திர கட்டணம் நிர்ணயம் செய்து வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கீழே குறிப்பிட்டுள்ளவாறு தொடர் கட்டணம் மற்றும் வழக்கு கட்டணம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **1.** | மாதாந்திர கட்டணம் (சென்னை உயர்நீதிமன்றம்) | ரூ.**7000**– |

| | | |
|---|---|---|
| 2. | மாநகராட்சியால் தாக்கல் செய்யப்படும் ரிட் மனுக்கள், ரிட் மேல்முறையீட்டு மற்றும் மற்ற மேல்முறையீட்டு வழக்குகள் | ரூ.7000– (இரண்டு தவணை) |
| 3. | எதிர் உறுதி மனு தாக்கல் செய்யப்பட்டு முழு விசாரணை செய்து முடிவு செய்யப்படும் வழக்குகள்/மேல்முறையீட்டு வழக்குகள் | ரூ.7000– (இரண்டு தவணை) |
| 4. | எதிர் உறுதி மனு தாக்கல் செய்யப்படாமல் முழு விசாரணை செய்து முடிவு செய்யப்படும் வழக்குகள் / மேல்முறையீட்டு வழக்குகள் | ரூ.4000– |
| 5. | தொகுதி வழக்குகள் (Batch cases) | முதல் மூன்று வழக்குகளுக்கு தலா ரூ.7000– வீதமும், மூன்று வழக்குகளுக்கு மேல் கூடுதல் ஒவ்வொரு வழக்கிற்கும் ரூ.2500– வீதமும் அதிகபட்சம் ரூ.40000– (இரண்டு தவணை) |
| 6. | ஆரம்ப நிலையிலேயே முடிவு செய்யப்படும் வழக்குகள் (Admission stage itself) | ரூ.3500– |
| 7. | உயர்நீதிமன்ற வழக்குகளில் டைப்செட் மற்றும் இதர செலவுகள் ஏற்படும் வழக்கு இனங்களில் வழக்கு கட்டணத்துடன் தனியே பட்டியல் தொகையும் வழங்கப்படும் | |
| 8. | மாநகராட்சி நிலை வழக்கறிஞர் நியமிக்கப்பட்டிருந்தாலும் வழக்கின் தன்மையை கருதி வழக்கை ஒப்படைக்கும் விஷயத்தில் ஆணையரின் முடிவே இறுதியானதாகும் | |

திரு. எம். ராஜாமதிவாணன் அவர்கள் 12 ஆண்டு காலம் உயர்நீதிமன்ற வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறார் (Enrolment No. 1535/2006). திரு. எம். ராஜாமதிவாணன், வழக்கறிஞர் அவர்களின் நியமனக் காலம் 31.07.2018 உடன் முடிவடைவதால், 01.08.2018 முதல் மூன்றாண்டுகளுக்கு இம்மாநகராட்சி நிலை வழக்கறிஞராக தொடர அனுமதியும், மேற்கண்டவாறு மாதாந்திர தொடர்கட்டணம் ரூ.5000–லிருந்து ரூ.7000–ஆகவும் மற்றும் வழக்கு கட்டணம் ரூ.6000–லிருந்து ரூ.7000–ஆகவும் உயர்வு செய்து வழங்கவும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/1097/2012

**91.** **அனுமதிக்கப்பட்டது.**

4. ஈரோடு மாநகராட்சியில் தினக்கூலிப்பணியாளர்களாகப் பணிபுரிந்து பின்னர் 25.02.2006ல் காலமுறை ஏற்ற ஊதியத்திற்கு கொண்டு வரப்பட்ட பணியாளர்கள், தங்களை பழைய ஓய்வூதியத்திட்டத்தில் சேர்க்கக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்குகள் W.P.No.22741/2015 (திரு.ஞானவேல் மற்றும் 9 நபர்கள்) மற்றும் W.P.No.2304/2016

(திரு.குருசாமி மற்றும் இருவர்) ஆகியவற்றின் தீர்ப்புரையில், மேற்படி பணியாளர்களை பழைய ஓய்வூதியத்திட்டத்தில் சேர்த்து பொதுவருங்கால வைப்பு நிதி கணக்கு எண். (GPF No.) ஒதுக்கீடு செய்ய வேண்டுமென உத்தரவிடப்பட்டது. மேற்படி தீர்ப்பாணையின் மீது மேல்முறையீடு செய்வது குறித்து சட்டக்கருத்துரை வழங்குமாறு அரசு தலைமை வழக்கறிஞர் திரு.விஜய்நாராயன் அவர்களை கோரப்பட்டத்தில், மேற்படி வழக்குகளின் தீர்ப்புரைக்கு உடனடியாக மேல்முறையீடு செய்ய வேண்டும் என சட்டக்கருத்துரை வழங்கியுள்ளார். மேலும் சட்டக்கருத்துரை வழங்கியமைக்கான கட்டணத்தொகை ரூ.25,000/—ஐ வழங்குமாறு தனது **20.07.2018**ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

மேற்படி தொகையினை அரசு தலைமை வழக்கறிஞர் திரு.விஜய்நாராயன் அவர்களுக்கு வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு —

வழக்கின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி முன் அனுமதி பெற்று தொகை வழங்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

(சி2/3476/2018)

**92. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

5. ஈரோடு மாநகராட்சியில் பணிபுரிந்து வந்த திரு.கே.பிரேம்குமார், இளநிலை பொறியாளர் (திட்டம்)(தற்காலிக பணிநீக்கம்) என்பவர், தற்காலிக பணிநீக்கத்தை இரத்து செய்து மீண்டும் பணிவழங்கக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண். W.P.No.33307/2016-ற்கு, **27.06.2018**—ம் தேதியில் தீர்ப்புரை பெறப்பட்டுள்ளது. வரப்பெற்ற தீர்ப்புரைக்கு இம்மாநகராட்சி சார்பாக மேல்முறையீடு செய்யக்கோரி மாநகராட்சி வழக்கறிஞர் திரு.எம்.ராஜாமதிவாணன், சென்னை உயர்நீதிமன்றம் அவர்களை கோரப்பட்டதற்கு மேல்முறையீடு தாக்கல் செய்ய தேவையான நீதிமன்ற கட்டணம், தமிழில் உள்ளதை மொழிபெயர்ப்பு செய்தல், வாதுரைகள் தயார் செய்தல், டைப்செட் பேப்பர்கள் மற்றும் இதர இனங்களுக்குரிய கட்டணம் ரூ.10,000/— (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்குமாறு 23.7.2018—ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

மேற்படி தொகையினை திரு.எம்.ராஜாமதிவாணன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு —

வழக்கின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி முன் அனுமதி பெற்று தொகை வழங்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

(சி1/6347/2016)

**93. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

6. ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான சம்பத் நகர் சாலை வணிக வளாக கடை எண்கள் 1, 2 மற்றும் 3 ஆகிய கடைகளுக்கு பின்புறம் 2058 சதுர அடி (49x42 அளவு) காலியிடம் உள்ளது. அதில் 10x10=100 சதுர அடி போக மீதமுள்ள 1958 சதுர அடி இடத்தினை இம்மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் இரு சக்கர வாகன நிறுத்தும் இடமாக பயன்படுத்திக் கொள்ள 2018-2021-ம் ஆண்டிற்கு, 01.08.2018 முதல் 31.03.2021 முடிய மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு, பொது ஏலம் மற்றும் சிறப்பு நிபந்தனைகள்

அடங்கிய பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கை மற்றும் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வைப்புத் தொகை ஆணையர் மற்றும் தனி அலுவலரின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஏல இனம் | ஏலம்/ ஒப்பந்தப் புள்ளிக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை | தேசிய மயமாக்கப்பட்ட வங்கி உத்திரவாத சான்று அல்லது வங்கி வரைவோலை டிமாண்ட் டிராப்ட் தொகை | ஏலம்/ ஒப்பந்தப் புள்ளி கேள்வி உறுதி செய்த பின் செலுத்த வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| 1. | சம்பத் நகர் சாலை வணிக வளாக கடை எண்கள் 1, 2 மற்றும் 3 ஆகிய கடைகளுக்கு பின்புறம் உள்ள 1958 சதுர அடி காலியிடத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.50,000- | ரூ.50,000- | உரிமத் தொகை முழுவதும் |

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு 2017-2020-ஆம் ஆண்டிற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்காணும் குத்தகை இனத்தினை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அவசர அவசியத்தை முன்னிட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி மேற்படி குத்தகை இனத்தினை உடன் ஒப்படைக்க வேண்டியுள்ளதால் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/160/2016

**94. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

7. ஈரோடு மாநகராட்சியில் வரி மற்றும் வரியில்லா இனங்களின் வரிவசூல் சதவீதம் மிகவும் குறைவாக உள்ளது. வரி மற்றும் வரியில்லா இனங்களின் வரிவசூல் பணியினை 31.03.2019-க்குள் 100% முடிக்கப்படவேண்டும். மேலும் வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருவதால், மேற்படி பணியை தீவிரப்படுத்த அவசர அவசியம் கருதி ஆட்டோவில் ஒலிபெருக்கி பொருத்தி மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் 24.07.2018 முதல் 31.03.2019 வரை விளம்பரம் செய்ய நேரில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் 23.07.2018 அன்று கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் கீழ்வருமாறு:

| வ. எண். | விபரம் | M/s. S.M.S கணேசா ஸ்டோர்ஸ், ஈரோடு (நாள் ஒன்றுக்கு) | M/s. JRS ஆடியோ & லைட் டெக்கரேட்டர், ஈரோடு (நாள் ஒன்றுக்கு) | M/s. ஸ்ரீநாதன்மதி எலக்ட்ரிக் ஒர்க்ஸ், ஈரோடு (நாள் ஒன்றுக்கு) |
|---|---|---|---|---|
| 1. | ஆட்டோ மூலம் | ரூ.2050- | ரூ.2100- | ரூ.2000- |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒலிபெருக்கி வைத்து விளம்பரம் செய்ய நாள் ஒன்றுக்கு | | | |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ஸ்ரீநாதன்மதி எலக்ட்ரிக்கல்ஸ், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி ரூ.2000- மிகவும் குறைவாகவும், உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாகவும் இருப்பதால், அதனை ஏற்று மேற்படியாருக்கு அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அவசர அவசியத்தை முன்னிட்டு ஆணையர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீநாதன்மதி எலக்ட்ரிக்கல்ஸ், ஈரோடு அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டதற்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/1787/2018

**95. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**8.** ஈரோடு மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசாணை எண்.**249** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நகராட்சி நிர்வாகம்–**3)** நாள்.**11.12.2008**ல் அனுமதிக்கப்பட்டதில் சிப்பம்–**2**க்கான பணிக்கு திருவாளர் ஆர்.ஏ.யு.எஸ் கன்ஸ்டிரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத் (M/s R.A.U.S. Constructions Pvt Ltd. Hydrabad) நிறுவனத்திற்கு மன்ற தீர்மான எண் **394** நாள் **29.3.2012** ன் படி பெறப்பட்ட அனுமதியின் பேரில் **07.05.2012** ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி பணியில் ஒப்பந்தத்தின்படி தெருக்களில் கழிவு நீர் சேகரம் செய்திடும் குழாய்கள் **109.538** கி.மீட்டர் நீளத்திற்கு சுடுமண் குழாய்கள் (Stone ware pipe) சிமென்ட் கான்கிரிட் குழாய்கள் ( RCC pipes) பதிக்கவும் அதற்கான ஆள் இறங்கும் தொட்டி மற்றும் வீட்டிணைப்பு குழாய்கள் பதிக்கவும் மேற்படி பணியினை **36** மாத கால வரையறையில் கீழ்கண்டுள்ளவாறு பதித்து முடிக்க அனுமதி வழங்கப்பட்டது.

| வ. எண் | பணிகள்மேற்கொள்ளபடவேண்டிய விபரம் | ஒப்பந்தத்தின் படி பணிமுடிக்கவேண்டி காலக்கெடு | | | |
|---|---|---|---|---|---|
| | | 1வது அளவீடு காலம் (மைல்கள்) 12 வது மாதம் வரை | 2வது அளவீடு காலம் (மைல்கள்) 24 வது மாதம் வரை | 3வது அளவீடு காலம் (மைல்கள்) 35 வது மாதம் வரை | 4வது அளவீடு காலம் (மைல்கல்) 36 வதுமாதம் வரை |
| 1. | கழிவுநீர் சேகரம் செயல்பாடு பணிகள் ஆள்நுழைவு குழிகள், தவழ்ந்து விழும் ஆள் நுழைவு குழிகள் (Drop monhole),வீட்டு இணைப்புகள் மற்றும், சாலை சீரமைப்பு பணிகள் உட்பட. | | | | |
| | அ) சுடுமண்குழாய்கள் (200mm, 250mm ,300mm) மற்றும் ஆர்.சி.சி., (RCC) எண். பி.3 (NP3) தர குழாய்கள் (200mm முதல் 600mm வரை) | 55000 மீட்டர் | 82000 மீட்டர் | 105938 மீட்டர் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆ) சிமெண்ட் கான்கிரிட் (கம்பி)குழாய்கள் (Rcc) | | | | |
| 2 | <u>அ) கழிவுநீர் நீரேற்று நிலையம்</u><br>கோட்டம் 2<br>கோட்டம் 3<br>கோட்டம் 4<br>கோட்டம் 5<br>கோட்டம் மற்றும் 8 | | 70% கட்டிட பணிகள் | 100% கட்டிட பணிகள் அனைத்து மின் பணிகள் மற்றும் இயந்திர பணிகள்) | |
| | <u>ஆ) நீர் மேல்தூக்கி நிலையம்</u><br>கோட்டம் 2(அ)<br>கோட்டம் 3((அ)<br>கோட்டம் 4 (அ)<br>கோட்டம் 5(அ)<br>மற்றும் கோட்டம் 5(ஆ) | | 70% கட்டிட பணிகள் | 100%கட்டிட பணிகள் அனைத்து மின் பணிகள் மற்றும் இயந்திர பணிகள்) | |
| | <u>இ) நீர்மூழ்கி, அடைப்பு ஏற்படாத நீரேற்று மோட்டார் மற்றும் இதர இயந்திரங்கள்.</u><br>**<u>நீர் ஏற்று நிலையம்</u>**<br>கோட்டம் 2<br>கோட்டம் 2 (அ)<br>கோட்டம் 3<br>கோட்டம் 4<br>கோட்டம் 4(அ)<br>கோட்டம் 5<br>கோட்டம் 5(அ)<br>மற்றும் கோட்டம் 8<br><br>(Duty) டியுட்டி 3288 Lpm X26மீட்டர் –2எண்கள்<br>(Duty) டியுட்டி 6576 Lpm X 26மீட்டர் –1எண்<br>(Duty) டியுட்டி 975 Lpm X 17மீட்டர் –2எண்கள்<br>(Duty) டியுட்டி 5099 Lpm X 34மீட்டர் –2எண்கள்<br>(Duty) டியுட்டி 10198 Lpm X 34மீட்டர் –1எண்<br>(Duty) டியுட்டி 3806 Lpm X 23மீட்டர் –2எண்கள்<br>(Duty) டியுட்டி 7612 Lpm X 23மீட்டர் –1எண்<br>(Duty) டியுட்டி 393 Lpm X 13மீட்டர் –2எண்கள்<br>(Duty) டியுட்டி 19359 Lpm X 25மீட்டர் –4எண்கள்<br>(Duty) டியுட்டி 391 Lpm X 15மீட்டர் –2எண்கள்<br>(Duty) டியுட்டி 543 Lpm X 13மீட்டர் –2எண்கள்<br>(Duty) டியுட்டி 779 Lpm X 25மீட்டர் –2எண்கள்<br>(Duty) டியுட்டி 15586 Lpm X 25மீட்டர் –1 எண் | | | 100% வழங்குதல் மற்றும் நிறுவுதல் பணிகளை | |
| 3. | <u>நீரேற்று குழாய்கள்</u> | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | D1 கே9 தர குழாய்கள்<br>D1கே9 தர – 300mm<br>D1கே9 தர – 200 mm<br>D1கே9 தர – 400 mm<br>D1கே 9 தர – 300 mm<br>D1கே 9 தர – 150 mm<br>D1கே 9 தர – 700 mm<br>D1கே 9 தர – 150 mm<br>D1 கே 9 தர – 150 mm<br>D1 கே 9 தர – 200 mm | 1475m<br>480 m<br>2575 m | 1000m<br>505m<br>1830m | 410 m<br>185 m<br>1470 m | |
| 4. | பரிசோதனை, இயக்குதல் மற்றும் சோதனை ஒட்டம் பணிகள் | | | | 100% |

ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தின்படி இதுவரை பணிகள் முடிக்காததால் ஆய்வுக் கூட்டங்கள் மூலமாகவும், உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டங்கள் மூலமாகவும் பணியினை விரைவுபடுத்தி முடித்திட தெரிவிக்கப்பட்டும் பணி தொய்வாக நடைபெற்று வந்ததால் 15.06.2012, 31.07.2012, 25.09.2012, 26.10.2012, 04.12.2012, 24.12.2012, 15.06.2017, 05.01.2018, 01.02.2018, 12.02.2018, 20.02.2018, 14.05.2018, 24.05.2018, 12.07.2018 தேதிகளில், அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் திருவாளர்.ஆர்.ஏ.யு.எஸ்.கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத் (M/s.R.A.U.S Constructions Pvt Ltd., Hyderabad) நிறுவனம் பணியினை வேகப்படுத்தாமல் இருந்து வந்ததால் பல்வேறு முறை நேரில் அழைத்து ஆய்வுக் கூட்டம் நடத்தியும் பணியில் முன்னேற்றம் போதுமான அளவு இல்லை என்பதால், பணியினை விரைவு படுத்துமாறும் தவறும் பட்சத்தில் L.D (Liquidated damage) பிடித்தம் செய்யப்படும் என 26.10.2012–ல் அறிவிப்பு வழங்கப்பட்டு ரூ.19,78,000/–ஐ பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி ஒப்பந்ததாரர் பணியினை வேகப்படுத்தாமல் இருந்து வந்ததால் பல்வேறு முறை நேரில் அழைத்து, ஆய்வுக் கூட்டம் நடத்தியும் பணியில் முன்னேற்றம் போதுமான அளவு இல்லை என்பதால், ஒப்பந்ததாரரால் இம்மாநகராட்சியில் செலுத்தப்பட்ட செயல்திறன் வங்கி உத்திரவாத சான்று திரும்ப பெற கிளை மேலாளர், கனரா வங்கி பிட்டாடி கிளை, நெல்லிகுட்டா டேங் சாலை, பிட்டாடி–562109 இராமநகரம் ஜில்லா, பெங்களூரு, கர்நாடகா மாநிலம் மூலம் 28.12.2012ம் தேதிய கடிதம் மூலம் ரூ.5.20 கோடி தொகை திரும்ப வழங்கும்படி தெரிவிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது.

தற்போது ஒப்பந்ததாரர் பணி ஆணை வழங்கி நாளது தேதி வரை ஒப்பந்த தொகை ரூ.52.00 கோடியில் 23ம் பகுதி பட்டியல்கள் மற்றும் விலை வித்தியாசத் தொகையும் சேர்த்து (ரூ.24.44 கோடி + 3.63 கோடி) = ரூ.28.07 கோடி அளவுக்கு பட்டியல் தொகை பெற்றுள்ளார். இதுவரை ஐந்துமுறை மொத்தம் 37 மாதங்கள் காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் பணிவுத்தரவு வழங்கப்பட்டு 73 மாதங்கள் கடந்த நிலையிலும் 59% (59 சதவீதம்) பணிகள் மட்டுமே முடித்துள்ளார்.

ஆனால் இறுதி அறிவிப்புகள் 14.05.2018, 24.05.2018 மற்றும்12.07.2018 ஆகிய தேதிகளில் வழங்கியும் திருவாளர்.ஆர்.ஏ.யு.எஸ். கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட் (M/s.R.A.U.S Constructions Pvt Ltd., Hyderabad) நிறுவனம் பணியினை நிறைவேற்ற எந்தவித முயற்சியும் எடுக்காமலும் எவ்வித தொடர்பும் இன்றியும் இருந்தனர்.

மேலும், 14.05.2018, 24.05.2018 மற்றும் 12.07.2018 ஆகிய தேதிகளில் இறுதி அறிவிப்பு அனுப்பப்பட்டு, அனைத்து பணிகளையும் முடித்து தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. தற்போது 73 மாதங்கள் கடந்த நிலையிலும் முடிக்கப்பட்ட பணிகளின் அளவு 59% (59 சதவீதம்) மட்டுமே உள்ளதாலும், 09.10.2017 முதல் 23.03.2018 வரை தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளாமல்

இருந்தமைக்கும், ஒப்பந்த விதி எண்.59ன்படி (Condition of Contract) மீதி பணிகளை முடிக்கக்கூடிய தகுதியற்றவராக கருதி அன்னாரது (M/s.R.A.U.S Constructions Pvt Ltd., Hyderabad) சிப்பம் II ஒப்பந்தத்தை முறிவு செய்யலாம்.

சிப்பம் 2ல் செய்து முடிக்காமல் உள்ள மீதி பணிகளை தற்போதைய விலை விகிதத்தில் புதிய மதிப்பீடு தயாரித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரிட மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் தனிஅலுவலர் அவர்கள் அங்கீகரித்து தீர்மானம் அனுமதிக்கலாம்.

மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் இழப்புகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திருவாளர்.ஆர்.ஏ.யு.எஸ்.கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத் (M/s.R.A.U.S Constructions Pvt Ltd., Hyderabad) அவர்களிடம் சட்டரீதியாக அணுகி வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

மேற்படி ஒப்பந்ததாரரை கருப்பு பட்டியலில் சேர்க்க அரசுக்கு பரிந்துரை செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

(இ4 /7587/2010)

**96.** **நிர்வாக நலன் மற்றும் பொது நலன் கருதி, திருவாளர் RAUS Constructions நிறுவனத்துக்கு Package II பணிக்கு வழங்கப்பட்ட பணி ஒப்பந்தத்தை ரத்துச் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

9. உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் அறிவுரையின்படி, தணிக்கைத் தடை பத்திகளில் குறிப்பிட்டுள்ள தொகைகளில், ஒப்பந்ததாரர் வைப்புத் தொகையில் இருந்து தணிக்கையில் சுட்டிக்கட்டப்பட்டுள்ள தொகைகளை பிடித்தம் செய்து மாநகராட்சி கணக்கில் ஈடு செய்யப்பட 06.08.2018-ம் தேதிய ஆணையர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்ட வைப்புத் தொகைகளில் (WS-4016) தணிக்கை தொகைகள், அவரவர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள விபரப்படி சரிக்கட்டலாம். விபரம் பின்வருமாறு:-

| வ.எண் | ஒப்பந்தாரரின் பெயர் | காலங்கடந்த வைப்புத் தொகைபதிவேடு தொகுப்பு | பக்கம் எண். | வருடம் | ஈடு செய்யப்பட வேண்டிய தொகை. ரூ. |
|---|---|---|---|---|---|
| | | **குடிநீர் நிதி** | | | |
| 1. | டி.கஜபதி | தொகுப்பு-I | 83 | 2012-2013 | ரூ. 1211/- |
| 2. | திருமதி. சாந்தி | தொகுப்பு-I | 46 | 2008-2009 | ரூ. 5700/- |
| 3. | வி.லோகாபிராமன் | தொகுப்பு-I | 72 | 2011-2012 | ரூ. 1840/- |
| 4. | ஏ.செல்வராஜ் | தொகுப்பு-I | 75 | 2011-2012 | ரூ. 5581/- |
| 5. | திருமதி. சாந்தி | தொகுப்பு-I | 46 | 2008-2009 | ரூ. 3330/- |
| 6. | திருமதி. சாந்தி | தொகுப்பு-I | 47 | 2008-2009 | ரூ. 3238/- |
| 7. | ஏ.என். ராமசாமி | தொகுப்பு-I | 78 | 2011-2012 | ரூ. 1716/- |
| 8. | ஏ.செல்ராஜ் | தொகுப்பு-I | 100 | 2012-2013 | ரூ. 875/- |
| 9. | S.V .&.co | தொகுப்பு-I | 54 | 2009-2010 | ரூ. 3348/- |
| 10. | M/S.VSS Constructions | தொகுப்பு-I | 59 | 2009-2010 | ரூ. 4253/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. | ஏ.செல்வராஜ் | தொகுப்பு-I | 75 | 2011-2012 | ரூ. 2947/- |
| 12. | ஏ.செல்வராஜ் | தொகுப்பு-I | 100 | 2012-2013 | ரூ. 3592/- |
| 13. | ஆர்.ராமசாமி | தொகுப்பு-I | 67, 69 | 2010-2011 | ரூ. 4520/- |
| 14. | ஸ்ரீ ஆர்யா ஏஜென்சீஸ் | தொகுப்பு-I | 91 | 2012-2013 | ரூ. 1259/- |
| 15. | ஸ்ரீ ஆர்யா ஏஜென்சீஸ் | தொகுப்பு-I | 91 | 2012-2013 | ரூ. 701/- |
| 16. | வி.விஜயலட்சுமி | தொகுப்பு-I | 86 | 2012-2013 | ரூ. 3200/- |
| 17. | M/S.GSM Constructions | தொகுப்பு-I | 96 | 2012-2013 | ரூ. 3000/- |
| 18. | M/S.PRG Constructions | தொகுப்பு-I | 96 | 2012-2013 | ரூ. 2200/- |
| 19. | சி.சிவசுப்ரமணியன் | தொகுப்பு-I | 95 | 2012-2013 | ரூ. 3337/- |
| 20. | சி.சிவசுப்ரமணியன் | தொகுப்பு-I | 95,96 | 2012-2013 | ரூ. 3150/- |
| 21. | வி.விஜயலட்சுமி | தொகுப்பு-I | 86 | 2012-2013 | ரூ. 4141/- |
| 22. | M/S.ஆறுமுகம் & கோ | தொகுப்பு-I | 95 | 2012-2013 | ரூ. 4984/- |
| 23. | M/S.ஆறுமுகம் & கோ | தொகுப்பு-I | 87 | 2012-2013 | ரூ. 5000/- |
| 24. | சி. குருநாதன் | தொகுப்பு-I | 79 | 2011-2013 | ரூ. 1673/- |
| 25. | வி.விஜயலட்சுமி | தொகுப்பு-I | 89 | 2012-2013 | ரூ. 3400/- |
| 26. | வி.லலிதா | தொகுப்பு-I | 87 | 2012-2013 | ரூ. 4000/- |
| 27. | சி. குருநாதன் | தொகுப்பு-I | 79 | 2011-2012 | ரூ. 4200/- |
| 28. | சி. குருநாதன் | தொகுப்பு-I | 79 | 2011-2012 | ரூ. 1013/- |

மேற்கண்ட விபரப்படி தணிக்கை தடையில் சுட்டிக்காட்டப்பட்ட தொகைகளை காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்ட வைப்புத் தொகைகளில் (WS-4016) தணிக்கை தொகைகள், மாநகராட்சி கணக்கில் ஈடுசெய்து கொள்ள ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அவசர அவசியத்தை முன்னிட்டு ஆணையர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட வைப்புத் தொகைகளை, காலங்கடந்த வைப்பு நிதி கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்ட குடிநீர்நிதி கணக்கு எண். 4016-லிருந்து மேற்கண்ட தணிக்கைத் தடை தொகைகளுக்கு சரி செய்து கொள்ள அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். இ2/4031/2018

**97. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**10.** நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை, அவர்களின் உத்திரவில் ஏற்கனவே இத்துறையால் ஒப்புதல் வழங்கப்பட்ட ஈரோடு மாநகராட்சி மண்டலம் –3க்குட்பட்ட வார்டு எண். 31 வில்லரசம்பட்டி கிராமம் நிலஅளவு எண்கள் 329/3,4ஏ,5 மற்றும் 6ஏ –ல் மனைப்பிரிவு ம.வ/ந.ஊ.இ.எண். 657/1991க்கு திருத்திய மனை அங்கீகாரம் ம.வ/ந.ஊ.இ.எண். 13/2018 என்ற எண்ணில் திருத்தி அமைக்கப்பட்ட வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடத்தில் உள்ளவாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட பூங்கா இடம் 5866ச.அடி, 23 அடி அகல சாலை 5117.05 ச.அடி மற்றும் 30 அடி அகல சாலை 6967.50 ச.அடி ஆகிய இடங்கள் ஏற்கனவே வில்லரசம்பட்டி ஊராட்சிக்கு பத்திர எண். 1247 நாள். 28.08.1991 ன்படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி ஒப்படைக்கப்பட்ட சாலை மற்றும் பூங்கா வருவாய் துறையினர் மூலம் உட்பிரிவு செய்து ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட ம.வ/ந.ஊ.இ.எண். 13/2018 என்ற எண்ணில் திருத்தி அமைக்கப்பட்ட வரைபடம் ஒப்புதலை ஈரோடு மாநகராட்சி ஒப்புதல் அளிக்க மாமன்ற அனுமதி வேண்டி ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**98. அனுமதிக்கப்பட்டது.**

11. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உபயோகத்தில் உள்ள தெருவிளக்குகளின் பயன்பாட்டில் மின்சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பணி மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட மாநகராட்சி பகுதிகளில் புதிய தெருவிளக்குகளை அமைக்கும் பணி ஆகியவைகளை ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு இயக்க திட்டத்தின்(IUDM) கீழ் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP mode) மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரி அலுவலக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.24,67,16,600/- செலவில் M/S.Schnell Energy Equipments private Limited, Coimbatore நிறுவனத்தின் மூலம் பணியினை மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் எண்.70, நாள் 01.07.2014-ல் அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்துள்ளது. மேலும் மாநகராட்சி பகுதிகளில் பயன்பாட்டில் உள்ள அனைத்து தெருவிளக்குகளும் ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் மூலம் மேற்கண்ட நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பணியில் அனுமதிக்கப்பட்ட பணிகளுடன் கூடுதலாக மற்றும் மாறுபாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விபரம் மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய தொகைகள் விபரம் பின்வருமாறு.

(அ) மேற்கண்ட பணியினை மேற்கொண்டபோது தெருக்களின் போக்குவரத்து, தற்போதைய தேவை மற்றும் எதிர்கால சாலை விரிவாக்கம் ஆகியவைகளை கருத்தில் கொண்டு கீழ்கண்ட சில பணி மாறுபாடுகளுடன்(deviations) மற்ற அனுமதிக்கப்பட்ட மின்சிக்கன பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன.

1. சத்திசாலை மற்றும் பூசாரி தோட்டம் சாலை சந்திப்பின் வாகன போக்குவரத்தினை கருத்தில் கொண்டு கூடுதலாக ஒரு எண்ணிக்கை 16 மீட்டர் உயர உயர் கோபுர மின் விளக்கு அமைக்கப்பட்டது.
2. இப்பணியில் பிரதான சாலைகளில் மையதிட்டு மற்றும் சாலையோரம் 9 மீட்டர் உயர MS Tubular pole-கள் 418 எண்ணிக்கைகள் அமைக்க அனுமதி பெறப்பட்டதில் சத்தி சாலை மற்றும் கரூர் பிரதான சாலை உள்ளிட்ட சாலைகள் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறையினரால் விரிவாக்கம் செய்யப்பட உள்ளதாக தெரிய வந்ததால் அவ்வாறு விரிவாக்கம் செய்யப்படவுள்ள சாலைகளை தவிர்த்து மற்ற பிரதான சாலைகளில் 9 மீட்டர் உயர MS Tubular pole-கள் 260 எண்ணிக்கைள் மட்டும் அமைக்கப்பட்டு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. மற்ற மின்விளக்குகள் மின்வாரிய மின் கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ளன. எனவே அனுமதிக்கப்பட்டதை விட 158 எண்ணிக்கை தெருவிளக்கு கம்பங்கள் குறைவாக அமைக்கப்பட்டுள்ளன.
3. ஈரோடு மாநகராட்சியின் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் குடியிருப்புகளின் வளர்ச்சியினால் தேவையான இடங்களில் புதிய தெரு விளக்குகள் அமைக்க பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றதன் காரணமாக மேற்கண்ட பணியின் PPP Concessionaire Agreement-ல் Section 2-Terms and conditions for Goods and Service-என்ற தலைப்பில் Sl.No.17-ல் புதிய மின் சிக்கன கருவிகளை நிறுவுதல் குறித்த வழிமுறைகளின்படி 20 வாட்ஸ் LED தெருவிளக்குகள் 1500 எண்ணிக்கைகள் ரூ.97,48,500/- தொகை மதிப்பில் மேற்கண்ட M/S.Schnell Energy Equipments private Limited, Coimbatore நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்டு பொருத்தப்பட்டு வருகிறது.

(ஆ) இப்பணியின் ஒப்பந்தப்படி தற்போது மேற்கண்ட மின் சிக்கன பணியில் ரூ.24,23,60,503/- மதிப்பிற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணி நிறைவு செய்யப்பட்டுள்ளன. எனவே இப்பணியில் பொருள்களை விநியோகம் செய்த உடன் 25% தொகை மற்றும் பொருள்களை பொருத்திய பின் 25% தொகை மட்டும் ஒப்பந்தத்தின்படி M/S.Schnell Energy Equipments private Limited, Coimbatore நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மீதம் வழங்க வேண்டிய 50 சதவிகித தொகையினை பணியின் ஒப்பந்தப்படி உறுதியளிக்கப்பட்ட 42% மின்சேமிப்பு கிடைக்கும் பட்சத்தில் கீழ்கண்ட விபரப்படி நான்கு ஆண்டுகளில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கவேண்டியுள்ளது.

| வ.எண். | வருடம் | வழங்கவேண்டிய தொகைக்கான வழிமுறை | வழங்கவேண்டிய தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | முதலாம் ஆண்டு இறுதி October 2017 | 12.5% முதலீடு தொகை மற்றும் 50% முதலீடு தொகைக்கான 8% வட்டி தொகை. | 3,02,95,063+96,94,420 =3,99,89,483/- |
| 2. | இரண்டாம் ஆண்டு இறுதி October 2018 | 12.5% முதலீடு தொகை மற்றும் 37.5% முதலீடு தொகைக்கான 8% வட்டி தொகை. | 3,02,95,063+72,70,815= 3,75,65,878/- |
| 3. | மூன்றாம் ஆண்டு இறுதி October 2019 | 12.5% முதலீடு தொகை மற்றும் 25% முதலீடு தொகைக்கான 8% வட்டி தொகை. | 3,02,95,063+48,47,210= 3,51,42,273/- |
| 4. | நான்காம் ஆண்டு இறுதி October 2020 | 12.5% முதலீடு தொகை மற்றும் 12.5% முதலீடு தொகைக்கான 8% வட்டி தொகை. | 3,02,95,063+24,23,605= 3,27,18,668/- |

தற்போது மேற்கண்ட பணியில் ஏற்பட்டுள்ள மின் சேமிப்பினை நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலம் மூன்றாம் தரப்பு ஆய்விற்காக நியமிக்கப்பட்டுள்ள மின் தணிக்கை நிறுவனமான M/S. TUV SUD South Asia Pvt. Ltd, Chennai நிறுவனம் ஆய்வு செய்து October 2016 மாதத்தில் 46.51% மின் சேமிப்பு கிடைத்துள்ளதால் 1st October 2016 தேதியை இந்த பணியின் substantial completion காலமாக எடுத்துக்கொள்ள தனது 26.02.2018 தேதிய சான்றிதழில் சான்று வழங்கியுள்ளது. அதனை தொடர்ந்து மேற்கண்ட நிறுவனம் நவம்பர் 2016 முதல் ஏப்ரல் 2017 வரை ஆறு மாதத்திற்கான மின்சேமிப்பினை ஆய்வு செய்து சராசரியாக 46.83% மின்சேமிப்பு கிடைத்துள்ளதாக தனது 14.03.2018 கடிதத்திலும், மே 2017 முதல் அக்டோபர் 2017 வரை ஆறு மாதத்திற்கான மின் சேமிப்பினை ஆய்வு செய்து சராசரியாக 46.32% மின்சேமிப்பு கிடைத்துள்ளதாக தனது 19.03.2018 தேதிய கடிதத்திலும் Energy savings validation certificate வழங்கியுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் 09.03.2018 மற்றும் 21.05.2018 தேதியன்று நடத்தப்பட்ட பணி முன்னேற்றம் தொடர்பான ஆய்வு கூட்ட நடவடிக்கைகள் கடிதங்களில் மேற்கண்ட Energy savings Post validation report-ன்படி ஒப்பந்ததாரருக்கு முதலாம் ஆண்டு (October 2017 ஆண்டுக்கான தொகை) வழங்க

வேண்டிய தொகையான பணியின் மதிப்பில் 12.5% தொகையினை வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ) இப்பணியில் கூடுதலாக விநியோகம் செய்து பொருத்தப்டும் 1500 எண்ணிக்கை 20 வாட்ஸ் LED தெருவிளக்குகளுக்கான மதிப்பான ரூ.97,48,500/-ல் ஒப்பந்தப்படி ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய தொகை பின்வருமாறு.

| வ.எண். | வருடம் | வழங்க வேண்டிய தொகைக்கான வழிமுறை | வழங்க வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | விநியோகம் செய்து பொருத்துதல் | 70% | 68,23,950/- |
| 2. | பொருத்தும் பணி முடிவுற்று இரண்டு ஆண்டுகளுக்கு பின் | 25% | 24,37,125/- |
| 3. | ஒப்பந்த காலத்தின் கடைசி(At the end of the contract period) | 5% | 4,87,425/- |

இத்திட்டத்தில் ஒப்பந்ததாரால் முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் மொத்த மதிப்பு பின் வருமாறு

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பு ரூ. |
|---|---|---|
| 1. | தெருவிளக்குகளுக்கான மின் சிக்கன பணிகள் | 24,23,60,503/- |
| 2. | 20வாட்ஸ் LED தெரு விளக்குகள் 1500 எண்ணிக்கைகள் கூடுதலாக விநியோகம் செய்து பொருத்தும் பணி | 97,48,500/- |
| | **மொத்தம்** | **25,21,09,003/-** |

எனவே கீழ்கண்ட விபரப்படி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. சத்திசாலை மற்றும் பூசாரி தோட்டம் சாலை சந்திப்பின் வாகன போக்குவரத்தினை கருத்தில் கொண்டு கூடுதலாக ஒரு எண்ணிக்கை 16 மீட்டர் உயர உயர் கோபுர மின் விளக்கு அமைக்கப்பட்ட பணி, மாநகராட்சியின் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் கூடுதலாக 1500 எண்ணிக்கை 20 வாட்ஸ் LED தெருவிளக்குகளுக்குகள் விநியோகம் செய்து பொருத்தப்படும் பணி மற்றும் பிரதான சாலைகளில் அமைக்க அனுமதிக்கப்பட்ட 9 மீட்டர் உயர MS Tubular street light pole-கள் 418 எண்ணிக்கைகளுக்கு பதிலாக 158 எண்ணிக்கை குறைவாக 260 எண்ணிக்கைகள் பொருத்தப்பட்டது ஆகியவற்றிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
2. தெரு விளக்குகளின் பயன்பாட்டில் மின் சிக்கனம் மேற்கொள்ளுவதற்கான இப்பணியில் ரூ.24,23,60,503/- மதிப்பிற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு திட்ட பணி நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட பணியில் பொருட்களை விநியோகம் செய்து பொருத்தியபின் ஒப்பந்ததாரருக்கு 50 சதவிகித தொகை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. எனவே ஒப்பந்ததாரருக்கு மீதம் வழங்க வேண்டியுள்ள 50 சதவிகித தொகையில் முதலாம் ஆண்டு இறுதியில் வழங்க வேண்டிய 12.5% தொகையினை மூன்றாம் தரப்பு ஆய்வு நிறுவனத்தினால் 1st October 2016 தேதியை இந்த பணியின் substantial completion காலமாக எடுத்துக்கொண்டு நவம்பர் 2016 முதல் அக்டோபர் 2017 வரையிலான காலத்தில் கிடைத்த சராசரி மின்சேமிப்பின்படி வழங்கப்பட்ட சான்றின் அடிப்படையில் ஒப்பந்தப்படி வட்டியுடன் M/S.Schnell Energy Equipments private Limited, Coimbatore ஒப்பந்ததாரருக்கு வழங்கவும் மற்றும் நவம்பர் 2017 முதல் அடுத்த மூன்று

ஆண்டுகளுக்கு பணியின் ஒப்பந்தப்படி ஒப்பந்ததாரருக்கு தொகையினை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

3. கூடுதலாக விநியோகம் செய்து பொருத்தப்படும் 1500 எண்ணிக்கை 20 வாட்ஸ் LED தெருவிளக்குகளுக்கான மதிப்பான ரூ.97,48,500/-ல் ஒப்பந்தப்படி M/S.Schnell Energy Equipments Private Limited, Coimbatore ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
4. இப்பணியின் மொத்த மதிப்பான 25,21,09,003/-ல் IUDM திட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ள மானியமான 12,33,58,300/-தொகை போக மீதி தொகை மற்றும் ஒவ்வொரு ஆண்டும் வழங்க வேண்டிய வட்டி ஆகியவற்றிற்கான செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/2249/2012

**99. அனுமதிக்கப்பட்டது.**

12. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டத்திற்கு அரசாணை எண் 249 நாள் 11.12.2008 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை மூலம் அனுமதி வழங்கப்பட்டு, அதில் மொத்தம் 5 சிப்பங்களில் சிப்பம் எண் 2 நீங்கலாக 4 சிப்பங்களின் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. இத்திட்டத்தில் இதுவரை செய்து முடிக்கப்பட்ட 64,744 எண்ணிக்கை வீட்டு இணைப்புகளில் சிப்பம்-2 போக மீதி 40,000 எண்ணிக்கை இணைப்புகளுக்கு (மாநகராட்சி கட்டிடங்கள், பள்ளிகள், பொதுக்கழிப்பிடங்கள் உட்பட) வீட்டிணைப்புகள் வழங்க 6 சிப்பங்களாக பணிகள் பிரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளுவதற்கு ந.க.எண். 12013/2018/UGSS-1-1 to 1-6 நாள்: 17.05.2018 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சேப்பாக்கம் சென்னை–5 அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளுவதற்கு ஆகும் மொத்த உத்தேச செலவினத் தொகை ரூ.36.40 கோடிக்கு, இம்மாநகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால், தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO) மூலம் வட்டியில்லா கடனுதவி பெற்று பணி மேற்கொள்ள அனுமதிக்கவும், இணைப்புகள் வழங்கிய பிறகு குடியிருப்பு உரிமையாளர்களிடம் இருந்து தவணை முறையில் இத்தொகையினையும் மற்றும் முன்வைப்புத் தொகையினையும் பயனீட்டாளர் கட்டணத்துடன் சேர்த்து வசூல் செய்து கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பபட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18281/2016/DO1, நாள்: 29.05.2018-ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. அதில் Providing interlink connection between inner premises of resident and chamber for house services connection 7000 Nos (Ward No.34,35,37,46,47,48) சிப்பம்-1 பணிக்கு மதிப்பீடு ரூ. 640.00 இலட்சத்திற்கு, மூடி முத்திரையிடப்பட்ட உறை அல்லது E-Tendering முறையில், இரு உறை அமைப்பில் 12.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1) M/s. Andavar Constructions, Tirupur .
2) M/s. Sri Sivaram & Co, Gobi.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை 18.07.2018 அன்று தொழில்நுட்ப தகுதிக்கான குழுவில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கான விலைப்புள்ளிகளை 25.07.2018 அன்று மதியம் 03.30 மணிக்கு திறக்கப்பட்டதில், பெறப்பட்ட

விலைவிகிதங்களை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும்போது பெறப்பட்ட விபரம் கீழ்க்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1 | M/s.Andavar Constructions, Tirupur | (+) 5.69 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | M/s. Sri Sivaram & Co, Gobi. | (+) 8.37 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரர்களும் மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) 5.69 சதவீதம் அதிகமானதாகவும் உள்ள M/s.Andavar Constructions, Tirupur அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க, இவ்வலுவலக கடிதம் எண்.இ4/2746/2018-1 -ன்படி கேட்க அறிவிப்பு 25.07.2018 அன்று கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 30.07.2018 தேதிய கடிதத்தில் இனம் எண்கள்- 5.01, 7 மற்றும் 8 ஆகியவற்றில் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை விட குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 4.88 % சதவீதம் அதிகமான விலை விகிதம் உள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட அதிகமான **(+) 4.88 %** சதவீதத்தில் கோரியுள்ள **M/s.Andavar Constructions, Tirupur** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1) மேற்படி திட்டப்பணிக்கு முதன் முறையாக வரப்பெற்ற தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) 4.88 % அதிகமான விலை விகிதம் உள்ள மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு பொறியர் கையேடு பக்கம் 9, பத்தி எண். 2.7.2. ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடி மாமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளது. இப்பணியின் அவசர அவசியம் கருதி, M/s.Andavar Constructions, Tirupur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று , பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு ஒப்புதல் வழங்கலாம்

கோப்பு எண் : E4/2746/2018-1

**100. <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**13.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3 வார்டு எண். **31** க்குட்பட்ட ஈரோடு பதிவு மாவட்டம், சூரம்பட்டி சார்பதிவு மாவட்டம், ஈரோடு வட்டம், வில்லரசம்பட்டி கிராமம், பழைய க.ச.188/1 இதற்கு புதிய ரீ.ச.எண். **16/4** பு.ஹெ. **0.36.5** தீர்வை ரூ. **1.24** இதற்கு பு.ஏ. **0.90** தொன்னூறு செண்ட் விஸ்தீரன பூமி பூராவும், பின்னும், மேற்படி வில்லரசம்பட்டி கிராமம், பழைய க.ச.187 இதற்கு புதிய ரீ.சர்வே எண். **17 /1** நெ.பு.ஹெ. **0.42.0**–க்கு தீர்வை ரூ. **1.16** இதற்கு பு.ஏ. **1.04** ஒரு ஏக்கர் நான்கு செண்ட் விஸ்தீரன பூமி பூராவும், ஆக மொத்தம் மேற்படி இரண்டு காலைகளில் சேர பு.ஏ.**1.94** ஒரு ஏக்கர் தொன்னூற்றி நான்கு செண்ட் விஸ்தீரன பூமியில் **25** அடி அகலத்தில் தென்வடலாகவும், **25** அடி, **23** அடி அகலத்தில் கிழமேலாக ரோடுகள் ஏற்படுத்தியும், பூங்காவுக்கான இடங்கள் ஒதுக்கி அனுமதியற்ற மனைப்பிரிவுகள்

முறைப்படுத்தும் திட்டம் நகர் ஊரமைப்புத் துறை (DTCP) சேலம் மண்டலம் ம.வ/ம (சே) எண். 257/2018 வரன்முறை மனைபிரிவு எண். 206/2018 நகர் ஊரமைப்புத்துணை இயக்குநர்(பொ) சேலம் மண்டலம் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டு "ஐஸ்வர்யா பார்க்" எனப் பெயர் வைத்து மனைநிலங்கள் பிரித்து விற்பனை செய்வதில் மேற்படி ஈரோடு மாநகராட்சிக்கு தானம் செய்து கொடுக்கும் கீழ்கண்ட இனங்களுக்கு அளவுகள் மற்றும் செக்குப்பந்தி விபரம்.

<u>பூங்கா –1 (மனை எண். 16)க்குச் செக்குப்பந்தி விபரம்.</u>

மேற்படி மனைப்பிரிவில் விடப்பட்டுள்ள 23 அடி அகல கிழமேல் சாலைக்கும் வடக்கு, வீட்டுமனை எண். 1க்கும் –தெற்கு, ரீ.ச.எண். 17/2 நெ. காலைக்கும்– மேற்கு, வீட்டுமனை எண். 15க்கும் –கிழக்கு, இதன் மத்தியில் வடபுறம் கிழமேலடி 31' 5'', தென்புறம் கிழமேலடி 24'6'', கிழபுறம் தென்வடலடி 45'6'', மேல்புறம் தென்வடலடி 45'0'' இந்தவகை அளவுள்ள 1255.70 சதுரடிகள் கொண்ட பூங்கா இடம் பூராவும், பின்னும்,

<u>பூங்கா –2 (மனை எண். 32)க்குச் செக்குப்பந்தி விபரம்.</u>

மேற்படி மனைப்பிரிவில் விடப்பட்டுள்ள 23 அடி அகல கிழமேல் சாலைக்கும் – வடக்கு, வீட்டு மனை எண். 17க்கும் –தெற்கு, ரீ.ச.எண். 17/2 நெ. காலைக்கும் – மேற்கு, வீட்டுமனை எண். 31–க்கும் – கிழக்கு, இதன் மத்தியில் வடபுறம் கிழமேலடி 24'6'', தென்புறம் கிழமேலடி 20'6'', கிழபுறம் தென்வடலடி 45'3'', மேல்புறம் தென்வடலடி 45'0'' இந்தவகை அளவுள்ள 1012.50 சதுரடிகள் கொண்ட பூங்கா இடம் பூராவும், ஆக மேற்படி இரண்டு பூங்காவுக்கான இடங்கள் பூராவும் சேர்ந்து 2268.50 சதுரடிகள் கொண்ட பூங்காக்கள் பூராவும், இந்த ரோடு தான சாசனப் பத்திரத்திற்குக் கட்டுப்பட்டது.

மேற்படி சொத்து ஈரோடு மாநகராட்சி எல்லைக்குட்பட்டது. இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் வரைபடத்தில் பூங்கா –1 உள்ள இடமானது பச்சை நிறத்திலும், பூங்கா –2 உள்ள இடமானது சிகப்பு நிறத்திலும் வர்ணமிட்டு காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்தின் பெயரளவு மதிப்பு ரூ. 100 /–

ஈரோடு பதிவு மாவட்டம், சூரம்பட்டி சார்பதிவு மாவட்டம், ஈரோடு வட்டம், வில்லரசம்பட்டி கிராமம், பழைய க.ச.188/1 இதற்கு புதிய ரீ.ச.எண். 16/4 பு.ஹெ. 0.36.5 தீர்வை ரூ. 1.24 இதற்கு பு.ஏ. 0.90 தொன்னூறு செண்ட் விஸ்தீரன பூமி பூராவும், பின்னும், மேற்படி வில்லரசம்பட்டி கிராமம், பழைய க.ச.187 இதற்கு புதிய ரீ.சர்வே எண். 17 /1 நெ.பு.ஹெ. 0.42.0–க்கு தீர்வை ரூ. 1.16 இதற்கு பு.ஏ. 1.04 ஒரு ஏக்கர் நான்கு செண்ட் விஸ்தீரன பூமி பூராவும், ஆக மொத்தம் மேற்படி இரண்டு காலைகளில் சேர பு.ஏ.1.94 ஒரு ஏக்கர் தொன்னூற்றி நான்கு செண்ட் விஸ்தீரன பூமியில் 25 அடி அகலத்தில் தென்வடலாகவும், 25 அடி, 23 அடி அகலத்தில் கிழமேலாக ரோடுகள் ஏற்படுத்தி " ஐஸ்வர்யா பார்க்" எனப் பெயர் வைத்து மனைநிலங்கள் பிரித்து விற்பனை செய்து வருவதில் இன்று நாங்கள் மேற்படி ஊராட்சிக்கு தானம் செய்து கொடுக்கும் ரோடுகளுக்கு செக்குப்பந்தி விபரம்.

<u>25 அடி அகல கிழமேல் ரோட்டுக்குச் செக்குப்பந்தி.</u>

வீட்டுமனை எண்கள். 1,2,3–க்கும் , இதனடியில் கண்ட 25 அடி அகல தென்வடல் ரோட்டுக்கும், வீட்டுமனை எண்கள். 4 முதல் 8 வரை உள்ள மனைநிலங்களுக்கு –வடக்கு, எங்களில் 2 லக்கமிட்டவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கும், பாலசுப்பிரமணியத்துக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கும், எங்கள் வசமுள்ள சொத்துக்கும் இதனடியில் கண்ட 2–வது அயிட்ட 25 அடி அகல தென்வடல் ரோட்டுக்கும் – தெற்கு, எங்கள் வசமுள்ள 5 அடி அகல இடத்துக்கும் – மேற்கு, எங்கள் வசமுள்ள 5 அடி அகல இடத்துக்கும் –கிழக்கு, இதன் மத்தியில் வடபுறம் கிழமேலடி 278.50, தென்புறம் கிழமேலடி 278.50, கிழபுறம் தென்வடலடி

25, மேல்புறம் தென்வடலடி 25 இந்தவகை அளவுள்ள 6962.50 சதுரடிகள் கொண்ட 25 அடி அகல கிழமேல் ரோடு ஒன்று பூராவும், பின்னும்,

<u>1–வது அயிட்ட 23 அடி அகல கிழமேல் ரோட்டுக்குச் செக்குப்பந்தி.</u>

1–வது அயிட்ட 25 அடி அகல தென்வடல் ரோட்டுக்கும் – மேற்கு, எங்கள் வசமுள்ள 5 அடி அகல இடத்துக்கும் – கிழக்கு, வீட்டுமனை எண்கள். 9 முதல் 13 வரை உள்ள மனைநிலங்களுக்கும் – தெற்கு, வீட்டுமனை எண்கள். 20 முதல் 24 வரை உள்ள மனைநிலங்களுக்கும் – வடக்கு, இதன் மத்தியில் வடபுறம் கிழமேலடி 145, தென்புறம் கிழமேலடி 145, கிழபுறம் தென்வடலடி 23, மேல்புறம் தென்வடலடி 23 இந்தவகை அளவுள்ள 3335 சதுரடிகள் கொண்ட 1–வது அயிட்ட 23 அடி அகல கிழமேல் ரோடு ஒன்று பூராவும், பின்னும்,

<u>2–வது அயிட்ட 23 அடி அகல கிழமேல் ரோட்டுக்குச் செக்குப்பந்தி.</u>

1–வது அயிட்ட 25 அடி அகல தென்வடல் ரோட்டுக்கும் – கிழக்கு, எங்கள் வசமுள்ள 5 அடி அகல இடத்துக்கும் – மேற்கு, வீட்டுமனை எண்கள். 14 முதல் 15 மற்றும் பூங்கா இடத்துக்கும் – தெற்கு, வீட்டுமனை எண்கள். 17 முதல் 19 வரை உள்ள மனைநிலங்களுக்கும் – வடக்கு, இதன் மத்தியில் வடபுறம் கிழமேலடி 85.50, தென்புறம் கிழமேலடி 81, கிழபுறம் தென்வடலடி 23, மேல்புறம் தென்வடலடி 23 இந்தவகை அளவுள்ள 1914.75 சதுரடிகள் கொண்ட 2–வது அயிட்ட 23 அடி அகல கிழமேல் ரோடு ஒன்று பூராவும், பின்னும்,

<u>3–வது அயிட்ட 23 அடி அகல கிழமேல் ரோட்டுக்குச் செக்குப்பந்தி.</u>

1–வதுஅயிட்ட 25 அடி அகல தென்வடல் ரோட்டுக்கும் – மேற்கு, எங்கள் வசமுள்ள 5 அடி அகல இடத்துக்கும் –கிழக்கு, வீட்டு மனை எண்கள். 25 முதல் 29 வரை உள்ள மனைநிலங்களுக்கும் – தெற்கு, வீட்டுமனை எண்கள். 37 முதல் 41 வரை உள்ள மனைநிலங்களுக்கும் – வடக்கு, இதன் மத்தியில் வடபுறம் கிழமேலடி 145, தென்புறம் கிழமேலடி 145, கிழபுறம் தென்வடலடி 23, மேல்புறம் தென்வடலடி 23 இந்தவகை அளவுள்ள 3335 சதுரடிகள் (கொண்ட 3–வது அயிட்ட 23 அடி அகல கிழமேல் ரோடு ஒன்று பூராவும், பின்னும்,

<u>4–வது அயிட்ட 23 அடி அகல கிழமேல் ரோட்டுக்குச் செக்குப்பந்தி.</u>

1–வது அயிட்ட 25 அடி அகல தென்வடல் ரோட்டுக்கும் – கிழக்கு, எங்கள் வசமுள்ள 5 அடி அகல இடத்துக்கும் – மேற்கு, வீட்டுமனை எண்கள் . 30 முதல் 31 மற்றும் பூங்கா இடத்துக்கும் – தெற்கு, மனைநிலங்களுக்கும் – வடக்கு, இதன் மத்தியில் வடபுறம் கிழமேலடி 75.50, தென்புறம் கிழமேலடி 74.50, கிழபுறம் தென்வடலடி 23, மேல்புறம் தென்வடலடி 23 இந்தவகை அளவுள்ள 1725 சதுரடிகள் (170.94 ச.மீட்டர்கள்) கொண்ட 4–வது அயிட்ட 23 அடி அகல கிழமேல் ரோடு ஒன்று பூராவும்,

<u>1–வது அயிட்ட 25 அடி அகல தென்வடல் ரோட்டுக்குச் செக்குப்பந்தி.</u>

மேலேகண்ட 25 அடி அகல கிழமேல் ரோட்டுக்கும் –தெற்கு, வீட்டு மனை எண். 36க்கும் – வடக்கு, வீட்டு மனை எண்கள். 4, 13–க்கும், 1–வது அயிட்ட 23 அடி அகல கிழமேல் ரோட்டுக்கும், வீட்டுமனை எண்கள். 20, 29–க்கும், 3–வது அயிட்ட 23 அடி அகல கிழமேல் ரோட்டுக்கும் – கிழக்கு, வீட்டுமனை எண்கள். 3, 14 –க்கும், 2 –வது அயிட்ட 23 அடி அகல கிழமேல் ரோட்டுக்கும், வீட்டுமனை எண்கள். 19,30 –க்கும், 4–வது அயிட்ட 23 அடி அகல கிழமேல் ரோட்டுக்கும் – மேற்கு, இதன் மத்தியில் வடபுறம் கிழமேலடி 25, தென்புறம் கிழமேலடி 25, கிழபுறம் தென்வடலடி 236, மேல்புறம் தென்வடலடி 236 இந்தவகை

அளவுள்ள 5900 சதுரடிகள் (580.64 ச.மீட்டர்கள்) கொண்ட 25 அடி அகல தென்வடல் ரோடு ஒன்று பூராவும், பின்னும்,

<u>2–வது அயிட்ட 25 அடி அகல தென்வடல் ரோட்டுக்கு செக்குப்பந்தி.</u>

ஏற்கனவே உள்ள 25 அடி அகல தென்வடல் ரோட்டுக்கும் – தெற்கு, மேலேகண்ட 25 அடி அகல கிழமேல் ரோட்டுக்கும் – வடக்கு, எங்கள் வசமுள்ள இடத்துக்கும் – கிழக்கும், மேற்கும், இதன் மத்தியில் வடபுறம் தென்புறம் கிழமேலடி 25, கிழபுறமும் மேல்புறமும் 35 இந்தவகை அளவுள்ள 875 (81.29 சதுரமீட்டர்கள்) சதுரடிகள் கொண்ட 25 அடி அகல தென்வடல் ரோடு ஒன்று பூராவும்,

<u>பூங்கா–1 (மனை எண். 16)க்குச் செக்குப்பந்தி விபரம்.</u>

மேற்படி மனைப்பிரிவில் விடப்பட்டுள்ள 23 அடி அகல கிழமேல் சாலைக்கும் – வடக்கு, வீட்டுமனை எண். 1–க்கும் – தெற்கு, ரீ.ச.எண். 17/2 நெ. காலைக்கும் – மேற்கு, வீட்டுமனை எண். 15–க்கும் – கிழக்கு, இதன் மத்தியில் வடபுறம் கிழமேலடி 31.50, தென்புறம் கிழமேலடி 24.50, கிழபுறம் தென்வடலடி 45.50, மேல்புறம் தென்வடலடி 45 இந்தவகை அளவுள்ள 1255.70 சதுரடிகள் கொண்ட பூங்கா இடம் பூராவும், பின்னும்,

<u>பூங்கா–2 ( மனை எண். 16)க்குச் செக்குப்பந்தி விபரம்.</u>

மேற்படி மனைப்பிரிவில் விடப்பட்டுள்ள 23 அடி அகல கிழமேல் சாலைக்கும் – வடக்கு, வீட்டுமனை எண். 17க்கும் –தெற்கு, ரீ.ச.எண். 17/2 நெ. காலைக்கும் – மேற்கு, வீட்டுமனை எண். 31 க்கும் – கிழக்கு, இதன் மத்தியில் வடபுறம் கிழமேலடி 24.50, தென்புறம் கிழமேலடி 20.50, கிழபுறம் தென்வடலடி 45.50, மேல்புறம் தென்வடலடி 45 இந்தவகை அளவுள்ள 1012.50 சதுரடிகள் கொண்ட பூங்கா இடம் பூராவும்,

ஆக மொத்தம் மேற்படி 25 அடி அகல கிழமேல் ரோடு ஒன்றும், 23 அடி அகல கிழமேல் ரோடுகள் நாலும், 25 அடி அகல தென்வடல் ரோடுகள் இரண்டும், பூங்கா – I, பூங்கா– II சேர்ந்து 26315.45 சதுரடிகள் (2444.76 சதுர மீட்டர்கள்) கொண்ட ரோடுகள் பூராவும் இந்த ரோடு தான சாசனப் பத்திரத்திற்குக் கட்டுப்பட்டது.

மேற்படி சொத்து ஈரோடு மாநகராட்சி எல்லைக்குட்பட்டது.

இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் வரைபடத்தில் மேற்படி 25 அடி அகல கிழமேல் ரோடு சிகப்பு நிறத்திலும், 1–வது அயிட்ட 23 அடி அகல கிழமேல் ரோடு நீல நிறத்திலும் , 2–வது அயிட்ட 23 அடி அகல கிழமேல் ரோடு மஞ்சள் நிறத்திலும், 3–வது அயிட்ட 23 அடி அகல கிழமேல் ரோடு ஊதா நிறத்திலும், 4 –வது அயிட்ட 23 அடி அகல கிழமேல் ரோடு ஆரஞ்சு நிறத்திலும், 1–வது அயிட்ட 25 அடி அகல தென்வடல் ரோடு கருப்பு நிறத்திலும், 2 –வது அயிட்ட 25 அடி அகல தென்வடல் ரோடு பச்சை நிறத்திலும், பூங்கா –I ரோஸ் நிறத்திலும், பூங்கா –II இளம் பச்சை நிறத்திலும், வர்ணமிட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அனுகுசாலை, பூங்கா மற்றும் மூலை முடுக்கு ஆகிய இடங்கள் ஈரோடு மாநகராட்சிக்கு 19.07.2018 அன்று சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் தான சாசனம் பத்திர எண். 2235/2018 பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டள்ளது. . எனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள சாலை, பூங்கா மற்றும் மூலை முடுக்கு ஆகியவைகளை ஈரோடு மாநகராட்சி எடுத்துக் கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண். இ2/ 1173 /2018

**101. அனுமதிக்கப்பட்டது.**

14. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட வார்டு எண். 34 ரீ.சர்வே.எண். 878/2B - இல் 71002.80 ச.அடி பரப்பளவில் பாலாஜி காட்டன் II- ல் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க ஈரோடு மாவட்டம், ஈரோடு ரிடி, ஈரோடு சப்டி, ஈரோடு தாலூக்கா, முனிசிபல் லிமிட்டுக்கு வெளிப்புறம், ஈரோடு கிராமம், பழைய க.ச.802/3, நெ.பு.ஏ.10.88-க்கு த.ரூ.12.19 இதில் பு.ஏ.1.61 இதற்கு ரீ.சர்வே எண்.878/2B இந்த வகை விஸ்தீரண பூமியில் ரோடு வகையறாக்களும் மற்றும் பூங்காக்களுக்கும் இடம் ஒதுக்கி மனையிடங்கள் பிரிவினை செய்து சைட் நெம்பர்கள் கொடுத்து விற்பனை செய்து வந்ததில் ஏற்கனவே விற்பனை செய்த வீட்டுமனையிடங்கள் மீதம் உள்ள வீட்டுமனையிடங்களுக்கு சம்மந்தபட்டதும், இந்த தானசாசனத்திற்கு கட்டுப்பட்டதுமான ரோடுகள் மற்றும் பூங்கா மற்றும் மூலை முடுக்கு ஆகியவற்றிற்கு செக்குப்பந்தி விபரம்.

அயிட்டம் : 1- பூங்கா

ரீ.சர்வே எண்.878/3, 4 நெ.காலைக்கும் மேற்கு, இதனடியில் கண்ட 23 அடி அகல தென்வடல் மனைப்பிரிவு சாலைக்கும் கிழக்கு, வீட்டுமனை எண்.19-க்கும் வடக்கு, ரீ.சர்வே எண்.878/2A நெ.காலைக்கும் தெற்கு, இதன்மத்தியில் வடபுறம் கிழமேல் 47 அடி, தென்புறம் கிழமேல் 60 அடி 9 அங்குலம், கிழபுறம் தென்வடல் 43 அடி, மேல்புறம் தென்வடல் 36 அடி, இந்தவகை அளவுள்ள 2127.86 சதுரடிகள் சதுரடிகள் கொண்ட பூங்கா இடம் பூராவும்,

அயிட்டம் : 2- 23 அடி அகல தென்வடல் மனைப்பிரிவு சாலை

ரீ.சர்வே எண்.878/2A நெ.காலைக்கும் தெற்கு, இதனடியில் கண்ட 30 அடி அகல கிழமேல் மனைப்பிரிவு சாலைக்கும் வடக்கு, வீட்டுமனை எண்கள்.1 முதல் 17 வரை உள்ள மனையிடங்களுக்கும் கிழக்கு, மேற்சொன்ன பூங்கா இடத்திற்கும், வீட்டுமனை எண்கள்.19 முதல் 31S வரை உள்ள மனையிடங்களுக்கும் மேற்கு, இதன்மத்தியில் வடபுறம் கிழமேல் 23 அடி, தென்புறம் கிழமேல் 23 அடி, கிழபுறம் தென்வடல் 437 அடி, மேல்புறம் தென்வடல் 426 அடி 9 அங்குலம், இந்தவகை அளவுள்ள 9933.12 சதுரடிகள் கொண்ட 23 அடி அகல தென்வடல் மனைப்பிரிவு சாலை பூராவும்,

அயிட்டம் : 3- 30 அடி அகல கிழமேல் மனைப்பிரிவு சாலை

மேற்சொன்ன 23 அடி அகல தென்வடல் மனைப்பிரிவு சாலைக்கும், வீட்டுமனை எண்.31S-க்கும் தெற்கு, ரீ.சர்வே எண்.879 நெ.காலைக்கும், நிலையில் உள்ள 30 அடி அகல சாலைக்கும் வடக்கு, வீட்டுமனை எண்.32-க்கும் கிழக்கு, ரீ.சர்வே எண்.878/3, 4-க்கும் மேற்கு, இதன்மத்தியில் வடபுறம் கிழமேல் 56 அடி, தென்புறம் கிழமேல் 59.75 அடி, கிழபுறம் தென்வடல் 30 அடி, மேல்புறம் தென்வடல் 30 அடி, இந்தவகை அளவுள்ள 1738.08 சதுரடிகள் கொண்ட 30 அடி அகல கிழமேல் மனைப்பிரிவு சாலை பூராவும்,

ஆக மேற்சொன்ன அயிட்டம்-1 பூங்கா 2127.86 சதுரடிகள் மனைநிலம், மற்றும் மேற்சொன்ன அயிட்டம் 2, 3, தாக்கு மனைப்பிரிவு சாலைகளும் சேர 11671.20 சதுரடிகள் விஸ்தீரண சாலைகள் பூராவும்,

மற்றும் மூலை முடுக்கு 12½ சதுரடிகள் மனைநிலம்,

ஆக மேலேகண்ட பூங்கா மற்றும் சாலைகள் மற்றும் மூலை முடுக்கு சேர 13799.06 சதுரடிகள் விஸ்தீரண நிலம் பூராவும், தானசாசனம் செய்யவுள்ளார்கள்.

ஷை மனைப்பிரிவு சாலைகள் இத்துடன் இணைத்துள்ள வரைபடத்தில் "மஞ்சள்" வர்ணத்திலும், பூங்கா இடம் "பச்சை" வர்ணத்திலுமாக காண்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அனுகுசாலை, பூங்கா மற்றும் மூலை முடுக்கு ஆகிய இடங்கள் ஈரோடு மாநகராட்சிக்கு 27.07.2018 அன்று சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் தான சாசனம் பத்திர எண். 4664/2018 பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டள்ளது. எனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள சாலை, பூங்கா மற்றும் மூலை முடுக்கு ஆகியவைகளை ஈரோடு மாநகராட்சி எடுத்துக் கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண். இ2/ 2153 /2018

**102. அனுமதிக்கப்பட்டது.**

15. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டத்திற்கு அரசாணை எண் 249 நாள் 11.12.2008 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை மூலம் அனுமதி வழங்கப்பட்டு, அதில் மொத்தம் 5 சிப்பங்களில் சிப்பம் எண் 2 நீங்கலாக 4 சிப்பங்களின் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. இத்திட்டத்தில் இதுவரை செய்து முடிக்கப்பட்ட 64,744 எண்ணிக்கை வீட்டு இணைப்புகளில் சிப்பம்-2 போக மீதி 40,000 எண்ணிக்கை இணைப்புகளுக்கு (மாநகராட்சி கட்டிடங்கள், பள்ளிகள், பொதுக்கழிப்பிடங்கள் உட்பட) வீட்டிணைப்புகள் வழங்க 6 சிப்பங்களாக பணிகள் பிரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளுவதற்கு ந.க.எண். 12013/2018/UGSS-1-1 to 1-6 நாள்: 17.05.2018 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சேப்பாக்கம் சென்னை–5 அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளுவதற்கு ஆகும் மொத்த உத்தேச செலவினத் தொகை ரூ.36.40 கோடிக்கு, இம்மாநகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால், தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO) மூலம் வட்டியில்லா கடனுதவி பெற்று பணி மேற்கொள்ள அனுமதிக்கவும், இணைப்புகள் வழங்கிய பிறகு குடியிருப்பு உரிமையாளர்களிடம் இருந்து தவணை முறையில் இத்தொகையினையும் மற்றும் முன்வைப்புத் தொகையினையும் பயனீட்டாளர் கட்டணத்துடன் சேர்த்து வசூல் செய்து கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பபட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18281/2016/DO1, நாள்: 29.05.2018-ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. அதில் Providing interlink connection between inner premises of resident and chamber for house services connection 7000 Nos (Ward No.38,39,49,50,60) சிப்பம்-2 பணிக்கு மதிப்பீடு ரூ. 640.00 இலட்சத்திற்கு, மூடி முத்திரையிடப்பட்ட உறை அல்லது E-Tendering முறையில், இரு உறை அமைப்பில் 12.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1) M/s. GVS Engineering & Construction, Chennai
2) M/s. Kala Associates, Chennai.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை 18.07.2018 அன்று தொழில்நுட்ப தகுதிக்கான குழுவில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளி மட்டும் தகுதி வாய்ந்ததாக உள்ளது.

1) M/s. GVS Engineering & Construction, Chennai

எனவே மேற்படி தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கான விலைப்புள்ளிகளை 25.07.2018 அன்று மதியம் 03.30 மணிக்கு திறக்கப்பட்டதில், பெறப்பட்ட விலைவிகிதங்களை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும்போது பெறப்பட்ட விபரம் கீழ்க்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1 | M/s. GVS Engineering & Construction, Chennai | (+) 4.99 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட தகுதிவாய்ந்த ஒப்பந்தப்புள்ளியும்,

அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) 4.99 சதவீதம் அதிகமானதாகவும் உள்ள M/s. GVS Engineering & Construction, Chennai அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க, இவ்வலுவலக கடிதம் எண்.இ4/2746/2018-2 -ன்படி கேட்க அறிவிப்பு 25.07.2018 அன்று கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 30.07.2018 தேதிய கடிதத்தில் இனம் எண்- 6.04-ல் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை விட குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 4.90 % சதவீதம் அதிகமான விலை விகிதம் உள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தப்புள்ளியும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட அதிகமான **(+) 4.90 %** சதவீதத்தில் கோரியுள்ள **M/s. GVS Engineering & Construction, Chennai** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :**

1) மேற்படி திட்டப்பணிக்கு முதன் முறையாக வரப்பெற்ற தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) 4.90 % அதிகமான விலை விகிதம் உள்ள மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு பொறியர் கையேடு பக்கம் 9, பத்தி எண். 2.7.2. ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடி மாமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளது. இப்பணியின் அவசர அவசியம் கருதி, **M/s. GVS Engineering & Construction, Chennai** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று , பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு ஒப்புதல் வழங்கலாம்

கோப்பு எண் : E4/2746/2018-2

**103. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

16. ஈரோடு மாநகராட்சி மண்டலம் - 2க்குட்பட்ட வார்டு எண் : 26 பிரகாசம் வீதி முத்துரங்கம்வீதி அண்ணாஜிவீதி மற்றும் சிவசண்முகம்வீதிகளில் பாதாள சாக்கடை பணிகள் காரணமாக சாலைகள் பழுதடைந்து போக்குவரத்திற்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இடையூறாக உள்ளது. மேலும் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகள் நடந்த வண்ணம் உள்ளது. எனவே பழுதடைந்த சாலைகளை செப்பனிட்டு புதிதாக தார்சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.43.00/- லட்சத்திற்கு 06.02.2018 அன்று தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 28.02.2018 அன்று E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளை, அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| செல்லியம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட்., | (+) 4.95% அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட அதிகம். |
| வேதநாயகி கன்ஸ்ட்ரக்சன் | (+) 7.51 % அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தாரர்களும் ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) 4.95% சதவீதம் அதிகமானதாகவும், உள்ள செல்லியம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட்.,

நிறுவனத்தினரை மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க இவ்வலுவலக கடிதம் எண்: இ1/621/2018 ன் படி 28.02.2018 அன்று கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்தாரர் தனது 03.03.2018 தேதிய கடிதத்தில் இனம் எண்-1,2,3,4,5,6,7,8 ல் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை விட குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-) 0.05 % குறைவான விலை விகிதம் உள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவனாதாகவும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட குறைவாக கோரியுள்ள திருவாளர்கள். செல்லியம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட்., நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பொது நிதி பணிக்கு முதன் முறையாக வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவனாதாகவும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட **-0.05 %** குறைவாக கோரியுள்ள திருவாளர்கள்**. செல்லியம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட்.,** நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதிலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று , பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை எடுத்தமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்: இ1/621/2018

**104. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

17. ஈரோடு மாநகராட்சி மண்டலம் II க்குட்பட்ட வார்டு எண் : 21 இல் குமலன் குட்டை பகுதியில் உள்ள செல்வம் நகர் பகுதியில் 5,6 மற்றும் 7 ஆகிய வீதிகளில் போதிய வடிகால் வசதி இல்லாத காரணத்தால் அப்பகுதி குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் ஆங்காங்கே தேங்கி நின்று விடுவதால் பொது சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பகுதியில் வடிகால் வசதி செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ19.00 லட்சத்திற்கு 03.05.2018 அன்று ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 18.05.2018-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட இரு ஒப்பந்தாரர்களும் மேற்கண்ட பணிக்கு டேவணித்தொகையாக, ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் செலுத்தியுள்ளார்கள். எனவே வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளை, எடுத்துக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| திருவாளர்.பி.டி.கே.கன்ஸ்ட்ரக்ஷன் | -0.05 % எடுத்துக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு |
| திருவாளர்.வி.தமோதரன் | 0.88 % எடுத்துக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தரார்களும் ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 1சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (-)0.05% சதவீதம் குறைவானதாகவும்,உள்ள திருவாளர்கள்.பி.டி.கே.கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தினர் அவர்கள் மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க இவ்வலுவலக கடிதம் எண்: இ1/756-4/2018-2 ன் படி 18.05.2018 அன்று கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்தாரர் தனது 22.05.2018 தேதிய கடிதத்தில் வேலை ஆட்களின் கூலி மற்றும் கட்டுமான பொருட்களின் விலை

உயர்ந்துள்ளதால் தற்போது மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார்.எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட குறைவான (-)0.05% சதவீதத்தில் கோரியுள்ள திருவாளர்.பி.டி.கே.கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தினர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

1) பணியின் அவசர அவசியம் கருதி அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தை விட (-)0.05% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **திருவாளர்.பி.டி.கே.கன்ஸ்ட்ரக்ஷன்**, ஒப்பந்ததாரர், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/756-4/2018-2

**105. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**